1427

1427

# தேவாராதனைக் கீர்த்தனைகள்

# CHURCH LYRICS.

பாக்கட் ரேட்.......................................

தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபை,

1933.

Q6:417
N33
77028

14

# Church Lyrics.

# தேவாராதனைக் கீர்த்தனைகள்

இச்சிறு கீர்த்தனைப் புஸ்தகம் இரண்டு நோக்கம் பற்றியது. நமது ஆராதனைகளில் சபையார் சில கீர்த்தனையாவது யாவரும் சேர்ந்து பாடிப் பழக வேண்டுமென்பது முதல் நோக்கம். மேலும் எளியார் சிறியார் யாவரும் வாங்கும் பொருட்டு, குறைந்த விலையா யிருக்க வேண்டுமென்பது இரண்டாம் நோக்கம். இச்சிறு புஸ்தகத்தில் பழைய, புதிய கீர்த்தனைகள் சேர்த்துத்திரட்டப் பட்டுள்ளது.

1933.

ஸம்பத் பிரஸ், மதுரை:—33.

# கீதங்களின் பொருள் அகராதி.


| | | |
|---|---|---|
| 1. | ஆரம்பக் கீர்த்தனைகள். | 1— 6 |
| 2. | ஸ்தோத்திரக் கீர்த்தனைகள் | 7—12 |
| 3. | தேவ வணக்கம் | 13—17 |
| 4. | தேவ புகழ்ச்சி | 18—23 |
| 5. | குணப்படுதல் | 24—28 |
| 6. | கிறிஸ்துவின் பிறப்பு. | 29—32 |
| 7. | கிறிஸ்துவின் பாடுகள் | 33—36 |
| 8. | ,, உயிர்த்தெழுதல் | 37—38 |
| 9. | பரிசுத்தாவியின் பண்டிகை. | 39—40 |
| 10. | மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகை. | 41—42 |
| 11. | சீர்திருத்தலின் பண்டிகை. | 43—44 |
| 12. | அறுப்பின் பண்டிகை. | 45—46 |
| 13. | ஜெபம். | 47—52 |
| 14. | ஞானஸ்நானம். | 53—54 |
| 15. | இராப் போஜனம். | 55—56 |
| 16. | விவாகம். | 57—58 |
| 17. | துன்ப துயர காலம். | 59—62 |
| 18. | ஆராதனை முடிவு. | 63—65 |
| 19. | தமிழ் ஆராதனை முறைமை. | |

# கீதங்களின் அகராதி.


| | கீதம் |
|---|---|
| அருமையுற நீ இரங்கி .... .... .... | 22 |
| அன்பர்க்கருள் புரிவோனே ... ... .... | 36 |
| அனுக்ரக வார்த்தையோடு .... .... ... | 63 |
| அமலா அருள் தாராய் ... .... ... | 45 |
| அல்லேலூயா ஜெயமே ... .... ... | 37 |
| ஆயேசுவே நீரிரங்கவே ... .... ... | 1 |
| ஆகமங்கள் புகழ் வேதா ... ... ... | 9 |
| ஆத்துமமே என் முழுஉள்ளமே .... ... | 12 |
| ஆண்டவனே கிருபை கூராய் .... .... | 25 |
| ஆரும் துணையில்லையே .... ... ... | 59 |
| ஆனந்தப் பண்பாடுவோமே ... .... | 44 |
| இவமே பெருமான் .... ... .... | 19 |
| இல்லார்க்கும் எளியார்க்கும் .... .... | 21 |
| இந்தக் குழந்தையை நீர் ... .... ... | 53 |
| இம்மணார்க் குன்னருள் ... ... ... | 58 |
| இன்பமுள்ள இயேசுவே ... ... ... | 64 |
| இன்னிய முகமலர்ந்து ... .... ... | 28 |
| உலகில் பவப்பாரத்தால் .... .... ... | 24 |
| உன்னதத்திற் பரற்கு ... ... .... | 31 |
| எமதேசுவே இப்போதே ... ... ... | 3 |
| என் மீட்பர் உயிரோடிருக்கையில் .... ... | 38 |
| ஏசு நாயகா வந்தாளும் .... .... ... | 57 |
| ஏதனுதி தேவனே .... .... ... | 35 |
| ஐயனே உமது திருவடிகளுக்கே .... .... | 50 |
| ஐயரே நீர்தங்கும் ... .... .... | 51 |
| கர்த்தரின் பந்தியில்வா .... .... ... | 55 |
| கல்லும் அல்லவே காயம் .... ... .... | 60 |
| காயம் ரத்தம் குத்துகள் ... ... ... | 33 |
| கும்பிடுகிறேன் நான் ... ... ... | 13 |
| குருசினில் தொங்கியே .... ... .... | 34 |
| சரணம் நம்பினேன் ... ... ... | 2 |
| சத்தாய் நிஷ்களமாய் .... .... .... | 10 |
| சீர்திரியேகவஸ்தே .... .... .... | 8 |

| | கீதம் |
|---|---|
| சிரேசு பாலன் ஜெய மனுவேலன் ... .... | 32 |
| சிரேசு நாதனுக்கு .... .... .... | 65 |
| சுத்தபரன் சுத்த ஆவியே .... .... .... | 39 |
| ஜெபம் மறவாதே நேசனே.... .... .... | 48 |
| ஜெபம் செய்யப் போதித்த.... .... ... | 49 |
| சேவித்துக் கொண்டேனையா .... .... | 14 |
| சேனைகளின் கர்த்தரே நின் .... .... | 23 |
| தினமே நானுனைத்தேடி .... .... ... | 16 |
| நியமன்றை மாற்றவாரும் .... ... .... | 40 |
| துதிக்கிறோம் உம்மை .... ... .... | 7 |
| துதி துதி பரன்றன்னையே .... .... .... | 41 |
| தேவனே யேசுநாதனே ... ... ... | 4 |
| தோத்திரம் செய்வேனே .... ... .... | 29 |
| நின்னடிக்கன்பு செய்யா நீசனேன் ... .... | 27 |
| பகையைத் தவிர்க்கப் படியோர் பிழைக்க .... | 20 |
| பத்தியாய் ஜெபம் பண்ணவே ... ... | 47 |
| பரமண்டலங்களிலிருக்கும் மெங்கள் .... .... | 52 |
| பஜித்திடும் சுவிசேட ... ... .... | 43 |
| பாடித் துதிமனமே .... ... .... | 11 |
| பாதம் ஒன்றே வேணும் ... ... ... | 15 |
| பாதகன் என் வினைதீர் ஐயா ... ... | 26 |
| பூமியின் குடிகளே நீர் .... ... .... | 42 |
| பொன்னகர் பயணம் போகும் ... ... | 61 |
| போசனந்தானுமுண்டோ .... ... ... | 56 |
| மண்ணுக்கும் விண்ணுக்கும் .... ... | 18 |
| மன்னிப்பீர் என்பிதாவே .... ... .... | 28 |
| மாசில்லா தேவா .... ... .... | 5 |
| வரந்தரவே வாவென் குருவே ... .... | 6 |
| வரவேணும் எனதரசே .... .... ... | 17 |
| வானம் பூமியோ பராபரன்... ... ... | 30 |
| வானமும் பூமியும் வகித்திடுந்தேவே ... ... | 46 |
| வெகுபேர்களுக் கின்பமான ... .... | 62 |
| ஞானஸ்நானமா ஞான திரவியமே ... ... | 54 |

# ஆரம்பக் கீர்த்தனைகள்.

## 1. திருவருள் மன்றாட்டு.

### (6-ம் ஞானப்பாட்டு).

இராகம்—சங்கராபரணம், ரூபகதாளம்.

கண்ணிகள்.

1. ஆ யேசுவே நீர் எங்களை
அன்பாகச் சேர்ந்துமதாவியை
நேயா அருள் அனுக்ரகத்தை
நிமலா தந்து காரும்.

2. பரந் தன்னில் நீர் பரிசுத்தர் மா
பரி சுத்தர் மாபரிசுத்தரே
பரனே சேனைப்பரனே என்று
பகர்ந்தே பார்க்குமளவும்.

3. வாயும் மையே போற்றி எங்கள்
மனம் நின் அன்பை ருசிக்கநற்ச
காயா விசுவாசந் தந்து
காரும் எம்மைப்பாரும்.

4. மூவாட் களாய் ஒரு வஸ்துவாய்
மூலோகமும் ஆளும்பரா
தேவா தந்தை சுதனவியே
தினமுந் துதி உமக்கே.

ஞா. சா.

**2.**

இராகம்—நாதநாமக்கிரியை, சாப்புத்தாளம்.

### பல்லவி.

சரணம் நம்பினேன் ஏசுநாதா! இது

### அனுபல்லவி.

தருணம், தருணம் உன்தன் கருணைகூர், வேதா —சர

### சரணங்கள்.

1. நின் அருளால் இங்கே வந்து—என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து,
முன் நாள் வினையைத் துறந்து—ஆதி
மூலமே! உனக்கோலம் ரட்சியாய் என்று —சர

2. சந்நிதி முன் தொண்டன் நின்றே—என்றும்
தாயான கருணை உனக்குண்டென்றே,
சென்னிமேல்கரந் தூக்கி நின்றே—உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே, —சர

3. அலைவாய்த் துரும்புபோல் ஆடி;—உன
ததிகருணைவரச் செம்பாதத்தைத் தேடி,
தொலையாத வாழ்வை மன்றாடி—அன்பின்
தோத்ர சங்கீர்த்தனை கீதங்களைப்பாடி —சர

4. இனிய கருணைபொழி வேதா—எனை
இருகரத்தால் அணைஎம் கிறிஸ்துநாதா
கனிவினையைத் தொலைத்தநீதா—நசரைக்
கர்த்தாதி கர்த்தனே! உன் கருணையைத் தாதா —சர

ச. உப.

## 3. இங்கு வந்தருள்வீரே

நாதநாமக்கிரியை, ஆதி தாளம்.

### பல்லவி.

எமதேசுவே இப்போதே எழுந்து நீர்
இங்கு வந்தருள் வீரே!

### சரணங்கள்.

1. உமது வீட்டில் வந்தோம்;
உணர்வாய் துதி தந்தோம்;
எமது முகம் பார்த்தருள் வீரே!— எம

2. ஆவியோடே பாடவும்,
அனலாய் உம்மைத் தேடவும்
தாவி மனம் உம்மில் கூடவும்,— எம

3. கருத்தாய் வேதம் கேட்கவே,
கவலை அதில் போக்கவே,
சுருதியில் உம்மை பார்க்கவே,— எம

4. ஆவியாலே பிரசங்கி;
அருள் மனதில் பொங்கி
ஆவலாகப் பிரசங்கிக்கவே,— எம

5. ஜீவ சக்தி யாம் பெற்று,
திரும்பி வீட்டிலே உற்று,
தேவ சேவை செபித்துத் தேறவே,— எம

C. A.

---

## 4.

தேவாலயத்தில் கிறிஸ்து பிரசன்னமாக விண்ணப்பம்.

இராகம்—கமாசு, "ஜீவனேசு கிருபாசனு" ஆதிதாளம்.

பல்லவி.

தேவனே ஏசுநாதனே இத்
தேவ ஆலயம் வந்திடும்;
தேவ ஆலயம் வந்தவர்க்கருள்
திவ்விய ஆவியை ஈந்திடும்.

சரணங்கள்.

1. பாவிகள் உமக்காலயஞ் செய்யப்
பாத்திரர்களோ அல்லவே
பாவநாசராம் இயேசுவே உம்மால்
பாத்திரராய் இதைச் செய்தனர். —தேவ

2. கூடிவந்தும்மையே பணிந்திடக்
குறித்த இத்திரு ஆலயம்
நாடிவந்தவர் யாவருக்குமுன்
நல் வசன முணவாகவும். —தேவ

3. தேவனே உமக்கான ஆலயம்
பாவியின் சிறு நெஞ்சமே
பாவம் யாவையும் நீக்கியே ஒரு
தேவ ஆலயமாக்கிடும். —தேவ

S. D.

---

**5.**

இராகம் சாமா, தாளம் ஆதி.

ஸாந்த முலேகா என்ற மெட்டு.

பல்லவி.

மாசில்லா தேவா மறைபுகழ் மூவா
மனந்தனிலருள் ஈவா மானிட ரூபா— மா

### அனுபல்லவி.

தேசுலாவும் சீலா தெய்வீகமனுவேலா— மா

### சரணம்.

1. பக்தியொடு நின்பாதம் பணிந்து போற்றிடவும்
முக்தியடைய நிதம் முனைந்து முயன்றிடவும்— மா

2. போதிக்கு மடியார்க்கும் புனிதா நின்னுவீதா
தீதுறும் வினைசூழா திரியேகனே அருள்தா— மா

3. ஞானப்பாலையுண்டு நல்ல கனிதரவும்
தீன தயாளா உன்றன் திருமொழியைக் கூறவும்—மா

4. அற்புதனே உன்றன் அடிகளுக்கே சரணம்
நற்பதமே எமின் நாவிலருள் தருணம்— மா

K. G.

---

## 6. தேவதுணை தேடல்.

கௌரி மனோஹரி. (ப்ரோவ சமயா) ஆதிதாளம்

### பல்லவி.

வரந்தரவே வா வென் குருவே!

### அனுபல்லவி.

சுரந்தவறு சுகக்யானம் கூட
பரந்துதிரீட பாசமுடன் பாட— வர

### சரணங்கள்.

1. அருணோதயமே! ஆதி மூல தேவா!
அருள்தந்திவ்வேளை அடியேனைக் காவா
கருணாகரா! காருண்ய யோவா!
கனிவாயிதயக் காதலுடன் பாட— வர

2. பாவப்பாசம் நீங்க பாதமே வணங்க
பக்தருள்ளம் பொங்க பரவஸமோங்க
சாவை வென்றவா! சாமி என் நாதா!
சரணடிவந்தேன் தாசனனிப்போதே— வர

3. வேதவாக்கின் மூலா! வேதியர்கள் நூலா!
போதமாய் விளங்கும் புகழான சீலா!
ஆதனனென்னை ஆட்கொண்ட வேலா!
அருமறையோர்னை ஆவலுடன் போற்ற.— வர

---

## ஸ்தோத்திர கீர்த்தனைகள்.

### 7. தேவ துதி.

(2 - ம் ஞானப்பாட்டு.)

இராகம்—சங்கராபரணம், ஆதிதாளம்.

1. துதிக்கிறோம் உம்மை - வல்லபிதாவே
துத்தியம் செய்வோம் - உமை மா அரசே
தோத்ரம் உம் மாட்சிமைக்கே - பரனே
துந்துமி மாட்சிமைக்கே - பிதாவே.

2. சுதனே யிரங்கும் - புவியோர் கடனைச்
சுமந்ததைத் தீர்த்த - தூயசெம்மறியே
சுத்தா ஜெபங்கேளும் - பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் - கிறிஸ்தே.

3. நித்யபிதாவின் - மகிமையில் நீரே
நிமலாவியினோ - டாளுகிறீரே
நிதமேகார்ச்சனையே - உன்னத
நேயருக் கர்ச்சனையே - ஆமேன்.

ஞா. சா.

---

## 8. பரிசுத்த திரித்துவ நாம பஜனை.

இராகம்—பூரிகல்யாணி, ஆதிதாளம்

### பல்லவி.

சீர்திரியேக வஸ்தே நமோநமோ நின்
திருவடிக்கு நமஸ்தே நமோநமோ.

### அனுபல்லவி.

பார் படைத்தாளும் நாதா
பரம சற்பிரசாதா
நாருறுந் தூய வேதா நமோ, நமோ, நமோ —சீர்

### சரணங்கள்.

1. தந்தைப் பராபரனே நமோ, நமோ, எமைத்
தாங்கி யாதரிப்போனே—நமோ, நமோ;
சொந்தக் குமாரன் தந்தாய்
சொல்லரும் நலமீந்தாய்
எந்தவிர் போக்குமெந்தாய் நமோ, நமோ, நமோ—சீர்

2. எங்கள் பவத்திஞசா நமோ, நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ, நமோ,
எங்கும் நின் அரசேற
எவரும் நின் புகழ்கூற
துங்கமந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ —சீர்

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா நமோ, நமோ
கரிசித்துத்தா நற்புத்தி
கபடற்ற மனசுத்தி
திருமொழி பற்றும்பத்தி நமோ, நமோ, நமோ —சீர்

ஞா. சா.

---

## 9. வேதா நமோ நமோ

இராகம்—சங்கராபரணம், ஆதி தாளம்.

### திருப்புகழ்

1. ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!
வாகுதங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா, நமோ நமோ!—அருரூபா,

2. மாகமண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியி னுல்லாசா, நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா, நமோ நமோ!—மனுவேலா,

3. நாகவிம்ப முயர் கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ!—நரதேவா,

4, ஏக மந்திரமுறு பூமா, நமோ நமோ!
யூக தந்திரவதி சீமா, நமோ நமோ!
யேசு வென்ற திருநாமா,நமோ நமோ!-இறையோனே.

வே. சா.

---

## 10. "கிறிஸ்துவே யெனக்கெல்லா மாயிருக்கிறார்"

தேவாரம் (பண், இந்தளம், நட்டராகமுமாம்)

1, 1சத்தாய் நிஷ்களமா யொரு சாமிய மும்மிலதாய்ச்
2சித்தா யானந்தமாய்த் திகழ் கின்றதி ரித்துவமே
வீத்தால் நாயடியேன் கடைத் தேறுவ னென்பவந்தீர்ந்
தத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

2. எம்மா விக்குருகி யுயி ரீந்துபு ரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ கடை காறுங் கையடையாய்ச்
சும்மா ரக்ஷணைசெய் சொல்சு தந்தரம் யா துமிலேன்
அம்மா னுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

3. ஈண்டே யென்னுளத்தில் விசு வாசவி ளக்கிலங்கத்
தூண்டா யென்னிலந்தோ மயல் சூழ்ந்துகெ டுத்திடுங்காண்
மாண்டா யெம்பிழைக்கா வுயிர்த் தாயெமை வாழ்விக்கவே
ஆண்டா யுன்னையல்லா லெனக் கார் துணை யாருறவே.

4. மையார்கண் ணிருண்டுசெவி வாயடைத்துக் குழறி
ஐயாள் மூச் சொடுங்கியுயி ராக்கைவிட் டேகிடுநாள்
நையேல்கை நெகிழேனு னைநானுண் டஞ்சலென
ஐயாவுன்னை யல்லாலெனக் கார் துணை யாருறவே.

5. திரைசேர்வெம் பவமாங்கடன் மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த்துய்க்க வென்றேபுணை யாயினை கண்ணிலியான்
பரசேன்பற் றுகிலேனெனைப் பாற்றியப் பற்றுவிடாய்
அரசேயுன்னை யல்லாலெனக் கார் துணை யாருறவே

6. தாயேதந்தை தமர்குரு சம்பத்துநட் பெவையும்
நீயேயெம் பெருமான்கதி வேறிலை நிண்ணயங்காண்
ஏயேயென் றிகழுமுல கோடெனக் கென்னுரிமை
ஆயேவுன்னை யல்லாலெனக் கார் துணை யாருறவே.

1 அழிவில்லாதது 2. வெளிப்படும் மறைபொருள்

கிருஷ்ண பிள்ளை.

---

## 11. பாடித் துதி மனமே

இராகம்—காம்போதி. ஆதி தாளம்.

பல்லவி.

பாடித் துதி மனமே; பரனைக் கொண்—டு
ஆடித் துதி தினமே.

அனுபல்லவி.

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப்— பாடி

சரணங்கள்.

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்துப்— பாடி

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காகப்— பாடி

3. எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள் இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்—கு
இத்தனையாய்க் க்ருபை வைத்த நம் கர்த்தனைப்— பாடி

வே. சா.

---

## 12.

### தேவபராமரிப்புக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம்.

இராகம்—தன்னியாசி, ஆதி தாளம்.

பல்லவி.

ஆத்துமமே! என் முழுஉள்ளமே—உன்
ஆண்டவரைத் தொழுதேத்து;—இந்நாள் அள
வன்புவைத்தா தரித்த
ஆண்டவரைத் தொழுதேத்து.

சரணங்கள்.

1. போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற்[1] கரிய தன்மையுள்ள —ஆண்

[1] சொல்லுதற்கரிதான.

2. தலைமுறை தலைமுறை தாங்கும்விநோத
உலகின்முன் தோன்றி ஒழியாத —ஆண்

3. தினந்தினம் உலகில் நீ செய்பலவான
வினைபொறுத் தருளும் மேலான —ஆண்

4. வாதைநோய் துன்பம் மாற்றி அனந்த
ஒதரும்தயை செய்துனக்கு உயிர்தந்த —ஆண்

5. உற்றுனக்கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றுங் கிருபையினால் முடிசூட்டும் —ஆண்

6. துதிமிகுந்தேற ஸ்தோத்திரி தினமே
இதயமே! உள்ளமே! என்மனமே! —ஆண்

தை. றை.

---

## தேவ வணக்கம்.

### 13. குருவேசுநாதர் பதங் கும்பிடுகிறேன்.

இராகம்--சக்ரவாகம். திஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்;--எங்கள்
குருவேசுநாதர்பதங் கும்பிடுகிறேன்.

சரணங்கள்.

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்;—எனை
ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;
நம்புமடியார்க்கருளைக் கும்பிடுகிறேன்;—பவ
நாசனைக் க்ருபாசனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்;—நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்;—தொனித்
தோசன்னு வோசன்னுவென்று கும்பிடுகிறன்.— கும்

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்;—ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்;
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்;—தவீது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்;—யூதர்
குலகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமை இரட்சகனைக் கும்பிடுகிறேன்;—என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன்.— கும்

வே. சா.

---

## 14. சேவித்துக் கொண்டேன் ஐயா.

இராகம், மோகனம். அடதாளசாப்பு.

பல்லவி.

சேவித்துக் கொண்டேன், ஐயா ;—சீர்பாதத்தைத்
தெரிசித்துக் கண்டேன், ஐயா.

சரணங்கள்.

1. ஆவிக்குரிய மண வாளன் ஏசுக்கிறிஸ்து
[1]ஜீவப்பிரான் ஒரு தேவ குமாரனை நான்— சேவி

2. [2]சந்த க்ருபை சிறந்த சத்ய பிதாவின் ஒரு
மைந்த கிறிஸ்துவே, நின் மகத்வ ப்ரசன்னத்தைச்-சேவி

3. நீற்றுப் பூச்சைத் துறந்து நெஞ்சம் உருகிச் சென்று,
ஆத்துமத்தாலும் உண்மையாலும் பணிந்து நின்று-சேவி

4. கந்தமலர் விடுத்துக்காவின் மலர்தடுத்துப்
புந்திக்கமலமென்ற பொற்பின் மலர்தொடுத்து— சேவி

5. காலையும் மாலையும் கருதியுமடியான் ஜெப
மாலையுருச் செபித்து மனது பரவசமாய்— சேவி

வே. சா.

---

1 எப்பொருட்கும் இறைவன் 2 அழகான

## 15. உன் பாதம் ஒன்றேவேணும்.

இராகம், கரகரப்பிரியை ஆதி தாளம்.

பல்லவி

பாதம் ஒன்றே வேணும்;—இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்.—உன்

சரணங்கள்.

1. நாதனே, துங்க மெய்—வேதனே, பொங்குநற்
காதலுடன் தூய—தூதர் தொழும் [1]செய்ய— பாதம்

2. சீறும் புயலினல்—[2]வாரிதி பொங்கிடப்
[3]பாரில் நடந்தாற்போல்—நீர்மேல் நடந்த உன்— பாதம்

3. வீசும் [4]கமழ் கொண்ட—வாசத் தைலத்தை
ஆசையுடன் மரி—பூசிப் பணிந்த பொற்— பாதம்

1 சிவந்த 2 கடல் 3 பூமி 4 வாசனை

4. போக்கிடமற்ற எம்—ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே [5]மரங்—தூக்கி நடந்த நற்— பாதம்

5. [6]நானிலத்தோர் உயர்—வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்—தானே கொடுத்த உன்— பாதம்

6. பாதம் அடைந்தவர்க்—காதரவாய்ப் பிர
சாதம் அருள் ஏசு—நாதனே, என்றும் உன்— பாதம்

யாழ்.

---

## 16. தினமே நான் உனைத் தேடிப் பணிய.

இராகம், சுத்தபங்காளா. ஆதிதாளம்.

பல்லவி.

தினமே நானுனைத் தேடிப் பணியத்
துணைபுரி வாய்நித்ய ஏக தெய்வமே!

அனுபல்லவி.

மனநிலை தவறி மருகினேன் நானே,
மாசிலானே அனுகூலநற் கோனே!

சரணங்கள்.

1. அருள் நாயகனே, அம்பரத் தீசா!
ஆதியாய் நின்றபேர் அருள்நிறை பாசா!
மருள்பவ நாசா, மனுக்குல ராசா!
மகிமை யடைந்தமா மகத்துவ நேசா!— தின

2. செத்தேன், எனக்குன் ஜீவன் அளித்தாய்,
தீயனென் மேல் திரு தீர்த்தம் தெளித்தாய்,
முத்தேயென் நன்மைக் காக மரித்தாய்,
மோதிய தீவினை யாவும் அழித்தாய்.— தின

5 சிலுவை 6 பூதலத்தோர்

3. திரளென் பாவங்கள் தீர்த்திட வாராய்த்
தீமை மறந்துநான் சீர்பெறக்கூறாய்க்
கரள் குணமாற்றிக் களிந்தெனைச் சேராய்க்
களிப்புடன் பாடிக் காதற்கண் பாராய்.— தின

S. P.

---

## 17. வரவேணும் எனதரசே

காஹரப்பிரியா. ஆதிதாளம்.

### பல்லவி.

வரவே ணும், என தரசே,
மனுவேல் இஸ்ரேல் சிரசே.

### அனுபல்லவி.

அருணோ தயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சரு வேசா!— வர

### சரணங்கள்.

1. வேதா, கருணு கரா, மெய்யான பரா பரா,
ஆதார நிராதரா, அன்பான சகோ தரா,
தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே.— வர

2. படியோர் பவ மோசனு, பரலோக சிம்மாசனு,
முடியா தருள் போசனு, முதன் மா மறை வாசனு,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்.
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய்— வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே,
கானுவின் அதிதனே, கலிலேய வினோதனே,
ஞானகரனே, நடு நிலை யோவா,
நண்பா, உனத நன்மையின் மகா தேவா!— வர

வே. சா.

---

# தேவபுகழ்ச்சி

## 18. தோமாவின் பரவச அறிக்கை.

சுருட்டி (மாற்றறியாத செழும்பசும், மிஸ்ரதாளம்.

தேவாரம்.

1. மண்ணுக்கும் விண்ணுக்கும் மேலான ஒளியே!
மரணத்தின்மேல் ஜெயங்கொண்ட என் ஒளியே!
கண்ணுக்கு முன்வந்த கருணையின் ஒளியே!
காதலாய் உம்தேகம் கண்டேனே ஒளியே!

2. சந்தேகம் நீக்கிட வந்த என்னரசே!
சாமி நீரென் தெய்வம் ஆண்டவன் அரசே!
எந்தவிதமும் எனைக் கைவிடீர் அரசே!
ஏழையின் நம்பிக்கை வீண் போகாதரசே!

3. மாந்தர்மேல் பேரன்பு வைத்த விண் மணியே!
மானிட ரூபமாய்த் தோன்றின மணியே!
சாந்தமும் தாழ்மையும் சேர்ந்த கண்மணியே!
தாசன் தோமாவின்மேல் தயை கூர்ந்த மணியே!

S. P.

---

## 19. இவரே பெருமான்

பியாகு ஆதிதாளம்

பல்லவி

இவரே பெருமான், மற்றப்பேர்
அலவே பூமான்,—இவரே பெருமான்.

சரணங்கள்

1. கவலைக் கிடங்கொடுத் தறியார்,—வேறு
பலவினை யாதுமே தெரியார்,—இப்
புவனமீது நமக்குரியார்.— இவரே

2. குருடர்களுக் குதவும் விழியாம்,—பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம்,—தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம்.— இவரே

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி,—சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி,—எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி.— இவரே

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன்,—கொடு
மறம்விடு பவர்க்கருள் மூத்தன்,—இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன்.— இவரே

5. அலகைதனை ஜெயித்த வீரன்,—பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன்,—விண்
ணுலகு வாழ் தேவ குமாரன்.— இவரே

6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன்,—அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன்,—நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன்.— இவரே

T. A.

---

## 20. பகையைத் தவிர்க்க வந்த துரையே.

ஹரிகாம்போதி. ரூபகதாளம்.

### திருப்புகழ்.

1. பகையைத் தவிர்க்கப், படியோர் பிழைக்கப்
பரிவா யமைந்த துரையே! எம்
பதிலாக நின்று பவமே சுமந்து
பலமா யெழுந்த பரலோகா!

2. குருவாயுதித்து உபதேசம் வைத்த
கிருபாகரத்தின் அருள் நேசா!
குறையை அகற்றி நிறைவை அளித்த
திருவாகமத்தின் ஜெய ராசா!

3. பெருகாதலுடன் அடியார்களிடம்
பிரியாத பட்ச முடனே, எம்
பிழையைப் பொறுத்து வழியே உதித்த
பெருமேன்மை பெற்ற பெருமானே!

S. P.

---

## 21. எல்லாருக்கும் ஏற்ற ரக்ஷகன்.

தீரசங்கராபரணம் (கல்லார்க்கும் கற்றவர்க்கும்) ஏகதாளம்.

### தேவாரம்.

1. இல்லார்க்கும் எளியார்க்கும் ஏற்ற நற்சகாயன்
இழிவான பாவிகளை ஏற்றுக்கொள்ளும் நேயன்
சொல்லாதகத்தின் எண்ணம் தோன்றவைக்கும் தூயன்
சுடராய் விளங்காநிற்கும் ஜோதிமயத் தேயன்

2. மண்ணோரைக் காக்கவந்த மாண்புநிறை மூலன்
மனுவாகிப் பாவம்போக்கு மாசில்லாத சீலன்
எண்ணோரை எண்ணிநல மீயுமனுகூலன்
இந்நாள் வரையி லென்னைக் காத்தமனு வேலன்

3. சிற்றோரை யேற்றுவரம் தந்த அருள் நாதன்
சேராரைச் சீரடையத் தேடியபொற்பாதன்
கற்றோரை ஞானிகளைக் கலங்கவைத்த வேதன்
கனிவான மாந்தர்மீது கருணையுற்ற போதன்.

4. எல்லார்க்கு மீட்பனுக இறங்கிவந்த ஈசன்
எல்லாரும் தம்மை நம்ப ஏவினநற் பாசன்
புல்லான பாவிகட்குப் புகலளித்த ராசன்
புவியோர் என்நாளும் சூழ்ந்து போற்றுபவ நாசன்.

S. P.

---

**22.**

இராகம், கேதாரகௌளம். கண்டசாபுதாளம்.

திருப்புகழ்.

1. அருமையுற நீ இறங்கி அடியனுள மீது தங்க,
அணுவளவிலாது பங்கம்—அகன்றோடும்;
அருளொளி யன்பே யுறைந்து அதிகவுயர்வாய் வளர்ந்து
அகமுழுதுமே நிறைந்து—வழிந்தோடும்.

2. திருவரசுன் சீர்குணங்கள் இனிய திருவாசகங்கள்
திவிய வரமாக வந்து—எனதாகும்;
தினமுமெழிலாயிலங்கி எனதகமுமே கனிந்து
சிறுமை செயும் 'நான்' மறைந்து—பறந்தோடி,

3. மருவு கிறிஸ்தேசுன் அன்பும் அமருமழகான இன்பும்,
மலர் முக சந்தோஷ பண்பும்—சுடரான
மகிமையும் நின்னேடுவந்து எனதிதயமே நிரந்து,
வளமை வரவே விளைந்து—நிலையாக,

4. உரிமையுடனே யுவந்து மனமதியெலாங் கவர்ந்து
உனதடிமையாய்ப் பரிந்து—எனையாளாய்!
உனதசனையாய்ச் சுரந்து அடியருளமே விரிந்து,
உதவு நதியாக வந்த—பெருமானே!

V. S.

---

## 23. சேனைகளின் கர்த்தரே நின்.

இராகம் - பிலகிரி, ஆதிதாளம்.

### பல்லவி

சேனைகளின் கர்த்தரே நின்
திருவில மளவற வினிதினிதே.

### அனுபல்லவி

வானவானங்கள் கொள்ளாத
ஈன ஆன்மாவைத் தள்ளாத —சேனை.

### சரணங்கள்

1. திருவருளிலமே, கணுறும் உணரும்
தெருளம்பகமே-இனிதுறும் நிசமிது —சேனை.

2. ஈண்டடியார் கேட்டிடும் நின்வசன மினிதே இனிதே
இகபர நலமொளிரிதமிகு பெயருள எமதரசனும் நய-சேனை

3. புவியோர் பதிவான் - புகநிதியே
புன்ருயிருறு முழுக் கருளினிதே
புதுவிடமே புகுமனமே புதுமதியே
புரிவோடு வினிதருள் —சேனை.

4. பேயொடேபுவி பேதை மாமிசம்
பேணிடா தடியாருனைப்
பேறு தந்தவனே எனச்சொலி
பேணிடத்துணை ஈவையே [,தம்
பேசருமுன்னந்தம். பேதைகளின் சொந்தம் பேதமிலானந்
பிசகொழியே - திடமளியே
பெருமலேயினிலரு முயிர்தரும் —சேனை.

5. ஆலயமது நிறைவாக
அவைகுறை யொழிந்தேக
அவரவருன திலமெனமனவிடர் சாக
அருளும் பொருளும் தெருளும் - செறிந்திடும்
ஆலய பரனேச
ஆசுகமது வீச
ஆரணமொழி பேச
ஆ புது எருசலேயாம்
ஆலயமொரு நிலையாம்
அது நிகரெது —சேனை.

ஞா. சா.

---

## குணப்படுதல்.

**24.**

### பாவிகள் மனந்திரும்பும்படி தேவன் அழைத்தல்.

இராகம்—காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

உலகில் பவப்பாரத்தால் சோரும்—இளைப்
பூர்ந்தநரரே! வந்துசேரும்.

அனுபல்லவி.

அலேசடிப் பட்டவரே! வாரும்;—என்றன்
ஆறுதலால் அவற்றைத்தீரும்;—பொல்லா —உலகில்

சரணங்கள்.

1. பாவி என்றெண்ணித் திகைப்போரும்,—என்றன்
பாவம் தீராதென்றிருப்போரும்,
ஆவலாய் ஓடிவந்து சேரும்;—நான்
ஆகாமியர்க்காக வந்ததோரும்1 பொல்லா —உலகில்

2. காலம் கடந்த கிழவோரே!—வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே!
காலமே தேட மறந்தோரே! உங்கள்
கவலையைத் தீர்ப்பேன், வருவீரே;—பொல்லா —உலகில்

3. வாலிபப் பிராயமதில் நாளும்—இன்ப
வாழ்வு சுகிக்கவென்று மாளும்
சிலரே! இன்றென்னுரைகேளும்;—அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும்;—பொல்லா —உலகில்

4. இளமை என்றே எண்ணி, நில்லாதே—சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே,
வளமாய் வருவதைத் தள்ளாதே; கெட்ட
வழக்கமதையே கைக்கொள்ளாதே;—பொல்லா —உலகில்

ஏ. ச.

---

## 25. ஆயக்காரன் ஜெபம்.

(லூக்கா 18, 13.)

இராகம்—மோகனம், சாப்புத்தாளம்.

பல்லவி.

ஆண்டவனே கிருபை கூராய்—எனக்
காதார முன்தனின் பாதாரவிந்தம்.

1 ஓரும்—உணரும்.

### அனுபல்லவி.

மீண்டெனின்மேல் தயை பூண்டருள் நாதா
ஈண்டுனின் தாள்பணிந்தேன் திருப்பாதா — ஆண்

### சரணங்கள்.

1. துர்க்குணத்தி லுருவானேன்—பொல்லாத்
தோஷியாய்ப் பேயவன் தோழனாய்ப் போனேன்
நற்குண மென்னில்நான் காணேன்—நித்ய
நாச மரண நரகுக்குள்ளானேன்
சற்குண மன்பு தயைமிகு தேவா
தாவிப் பிடித்தேனுன் மேவிநீ காவா — ஆண்

2. பாவ ஊற்றெனதுள்ளம் மெய்யே—பாவம்
பாய்வழி யென்செவி வாய் கண் கால் கையே
நோவென்னைப் பிடித்ததென் ஐயே—எனை
நோக்கி யுலகுசொல்லும் ஆறுதல் பொய்யே
ஏவை புத்திரனழு தேங்கல் நோக்காயோ
என்பாவச் சேற்றை விட்டென்னை தூக்காயோ — ஆண்

3. சாபத்துக்காளாய்ப் போனேனே—சீனாய்
தன்னிடி குமுறலின் சத்தங்கேட்டேனே
கோபத்தின் தீயைக்கண்டேனே—தேவ
கோஷ்ட முணர்ந்தே கலக்கமுற்றேனே
ஆபத்தில் நீ என் அடைக்கலம் தஞ்சம்
ஐயையோ எங்கோடும் என் ஏழைநெஞ்சம் — ஆண்

4. பாடெனக்காய்ப் பட்டாயன்றோ—என்தன்
பத்தாநின் சாவு நான் சாவதற்கென்றோ
கேடென்னில் நிற்பதும் நன்றோ—உன்னைக்
கேளாதிருக்க உன்தன் மனங்குன்றோ
நாடறியப் பாடு பட்டுயிர் தந்தாய்
நம்பினபேர்க்கா யுயிர்த்தங்கு சென்றாய். — ஆண்

5. மன்னித்தோமென்று சொல்வாயே—அப்போ
மாபாவி நான் மெய்யாய் உன்நேசச் சேயே
பொன்னுலகென்னைச் சேர்ப்பாயே—நின்னைப்
போற்றிடும் என் மனதோடென்றன்வாயே
மன்னவா தூய்யநல் இருதயந் தாராய்
வானவழிதன்னில் காவென்னை நேராய் —ஆண்

ஞா. சா.

---

## 26. பாவமன்னிப்புக்காகக் கேஞ்சல்.

இராகம்—ஆனந்தபைரவி, ஏகதாளம்.

பல்லவி

பாதகன் என் வினைதீர் ஐயா! கிருபாகரா! நின்
பாடுநினைந் தென்னைச்சேர் ஐயா!

அனுபல்லவி

தீதகற்றவேசிறந்த
சேண்உலகினிமைவிட்டுப்
பூதலத்துகந்துவந்த
புண்ணியனே! ஏசுதேவா! —பாதக

சரணங்கள்

1. வந்துறும் எப்பாவிகளையும்—அங்கீகரிக்கும்
மாசில்லாத ஏசு நாதனே!
உந்தன் இடம் வந்துளமே, உருகி அழுது, மாது
முந்திமிகச் செய்தபாவம் முழுதும் பொறுத்தாய் அன்றோ
—பாதக

2. சிந்தின உன் உதிரம் அதே—தீயோன்மறத்தைச்
சின்னபின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உந்தன்வலப் பாகமுற்ற கள்வனையே
விந்தையுறவோட்சித்த வேதனே! அவ்விதமாயே —பாதக

3. அற்பவிசுவாசமுள்ளன் ஆம்—அடியேனை இனி
ஆதரிப்பதார் உன்தஞ்சமே;
தற்பரா! உனைத்தரிசித் தன்றிநம்பிடேன் எனவே
செப்பினதோமாவுக்குப்போல் திருஉருகாட்சிதந்து—பாதக

4. ஓங்கும் உன்தயை எத்தனையும்—உணர்ந்திடாமல்
உண்மையற்ற பாவி ஆயினேன்;
தீங்குசெய்யவேசவுலு சென்றவழியில் அவனைத்
தாங்கிஉந்தன் தாசனுய்ச்செய் தயையின்படியே ஸ்வாமி
—பாதக

5. பொன், அரிவை, மண்ணில் ஆசையே—புனைந்தன் அன்பு
போக்கிய நிர்ப்பாக்கியபாவியான்
நன்னயமதாய்யோவான் தன் நாட்களில் எல்லாம் நிலைத்து
நின்னிடத்தில் நேசம்வைத்த நேர்மையாய் எளியேன் உய்ய
—பாதக

ஜா. பா.

---

## 27. நின்னடிக் கன்பு செய்யா நீசனேன்.

### தேவாரம்.

( பண்—நேரிசை )

1. நின்னடிக் கன்பு செய்யா நீசனேன் ஈசனே யுன்
பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர் குழாத்துட் புக்கு
நன்னடை கற்று மில்லேன் நன்றெலா மொருவி நின்ற
என்னடை யிகந்து மில்லே னென்செய்வான் றோன்றி
னேனே.

2. கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமையங் கீறிப்
பிதிர் படச் சிறுவைமீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோலத்தை மனக்கணுற் றரிசித் தேத்தி
இதயநெக் குருகு கில்லே னென்செய்வான் றோன்றி
னேனே.

3. சுத்தனே அல்ல னன்மை சொல்லவொட் டுனையு மில்லேன்
பித்தனுன் பெரிய பாவி பிழைக்குமோ றுணர மாட்டேன்
நித்தநீ யருளு மீவை நினைகிலே னன்றி யீனம்
எத்தனை யிறைவ னேயா னென்செய்வான் றோன்றி
னேனே.

4. அழுகிலேன் மனங்க சந்திட் டளியனேன் பிழையை யுன்னி
விழுகிலே னின்பாதார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலே னுவி யாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலே னீச னேயா னென்செய்வான் றோன்றி
னேனே.

H. A. K.

---

**28.** மன்னிப்பீர் என் பிதாவே.

தேவாரம்.

இராகம், கரஹரப்ரிய. ரூபகதாளம்.

1. இன்னிய முகமலர்ந்து இருதயத் துருகுமன்பால்
உன்னத தேவ மைந்தன் உலகின்பாற் கருணை கூர்ந்து,
'மன்னிப்பீர் என்பிதாவே! மதலைகளிவர்கள் குற்றம்
மன்னிப்பீர்' என்றுருகு மனுவுக்கே ஆமென் என்பீர்.

2. பதிலுக்குப் பதில் செயென்ற பழைய ப்ரமாண மாற்றிப்
புதியதங் கற்பனையைப் புவியதில் நாட்ட வந்த
கதிதருங் கருணைமூர்த்தி கருணையுற் றுருகித் தம்மை
வதைத்திடும் யூதர்கட்காய் வருந்தியே ஜெபித்து நின்றார்.

3. விற்றதும் வீணன் நானே, வெறுத்ததும் வீணன் நானே,
செற்றதும் சேவகன் நானே, அறைந்ததும் அடிமை நானே,
குத்தின கோரன் நானே, கொலைபுரிந்தவனும் நானே,
இத்தனை பாவஞ்செய்தேன்; இரங்கியாட் கொள்ளுமையா.

4. மன்னிப்பீர் எந்தன் பாவம், மைந்தர் தம் சிலுவைநோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம், மைந்தர் ஐங் காயநோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம்; மரிக்கும் தம்மைந்தர் நோக்கி,
மன்னிப்பீர் எந்தன் பாவம், மன்னிப்பீர் ஆமென் ஆமென்.

A. G. P.

---

## கிறிஸ்துவின் பிறப்பு.

**29.**

### மனித அவதாரம் செய்த இரட்சகருக்குத் துதி.

இராகம்—பைரவி, ஆதிதாளம்.

பல்லவி

தோத்திரம் செய்வேனே—ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே.

அனுபல்லவி.

பாத்திரமாக்க இம்மாத்திரம் கருணை வைத்த
பார்த்திபனை யூதக் கோத்திரனை, என்றும், —தோத்

சரணங்கள்.

1. அன்னை மரிசுதனை—புல்மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி இங்கிலத்துற்றோனைத் —தோத்

2. செம்பொன் னுருவானை—தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பரம் மேவிய உம்பர் குழாங்களோ
டன்பு பெற நின்று பைம்பொன் மலர் தூவித் —தோத்

3. கந்தை பொதிந்தவனை—வானோர்களும்
வந்தபடி பணிபவனை
மந்தையர்க்கானந்த மாட்சிமை யளித்தோனை
வானபரன் என்னும் ஞான குணவானைத் —தோத்

ச. உப.

---

## 30. தேவன் மனிதனானர்.

இராகம்—செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி

வானம் பூமியோ! பராபரன்
மானிடன் ஆனாரோ! என்ன இது]

அனுபல்லவி.

ஞானவான்களே!. நிதானவான்களே! —வானம்

சரணங்கள்

1. பொன் நகரதாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத் துரை
பூபதி வந்ததேததிசயம்—ஆ! என்ன இது! —வானம்

2. சத்திய சருவேசன், துத்திய கிருபைவாசன்,
நித்திய பிதாவினோர்,
மகத்துவக் குமாரனோ இவர்!—ஆ! என்ன இது! —வானம்

3. அரூபரூப சொரூபன், கெரூபின் வாகன தீபன்,
வீரியப் பிரதாபன், சீனு
வெற்பி விருந்தவன் கற்பனை தந்தவன்—ஆ! என்ன இது!
—வானம்

4. மந்தைக் காட்டிலே மாட்டுக்கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி—ஆ! என்ன இது!
—வானம்

5. வேறெ பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல,
மாறிலாத ஈறில்லாத வல்லமைத் தேவனே
புல்லில் கிடக்கிறார்—ஆ! என்ன இது! —வானம்

6. சியோனின்மாதே, இனி க்ஷணந்தரியாதே
மாயமென்ன உனக்குச் சொல்லவோ!
வந்தவர் மணவாளனல்லவோ—ஆ! என்ன இது!—வானம்

வே. சா.

---

## 31. தேவ தூதர் பாட்டு.
(லூக். 2. 14.)

இராகம் பைரவி, சாப்புத்தாளம்.

கண்ணிகள்.

1. உன்னதத்திற் பரற்கு மகிமை உலகிற் சமாதானம்
இந்நிலை மானிடர்மேல் பிரியம் இன்றென்று முண்டாக.
2. வான பரன்மகிமை பவத்தால் மறைந்த தாயிருக்கப்
பானொளிபோற் சுதனுர் பிறந்தார் பாவ இருள் நீக்க
3. பாவத்தினுல் புவிக்கும் பரர்க்கும் பலத்து நின்றயுத்தம்
தாவீதின் சிற்றூரில் பிறந்தோர் தக அமர்த்தினரே.
4. மானிடனுய்ப் பிறந்த சுதன்மேல் வைத்திடுங் கண்ணதற்கு
ஈன மானிடர்மேல் பிரியம் இன்றே உண்டாயினதே.

ஞா. சா.

---

## 32. சீரேசுபாலன் ஜேய மனுவேலன்.

ஹம்சத்வனி. ஆதிதாளம்.

பல்லவி.

சீரேசு பாலன் ஜெயமனு வேலன்
சீர் நாமத்தை தினமே போற்றுவோமே.

அனுபல்லவி'

பாராளும் வேந்தன் பகரொண்ணு மைந்தன்
தாராள மாகத் தாமே மனுவான— சீரே

சரணங்கள்.

1. எண்ணரும் பெருமான் ஏழை சாயலாக
மண்ணி லேகின மாட்சிமை யாலே,
விண்ணவர்கள் போற்ற, வானக்கவி சாற்ற
வண்ணம்பாடி நாம் மகிழ்ந்திட வேண்டாமோ?—
சீரே

2. உன்னத பரனுக் கொப்பில்லா மகிமை
இந்நிலத்தினில் மெய்ச்சமா தானம்,
மன்னுயிர்கள் மீது மாபிரியம் ஓங்க
தன்னுயிர் தந்த தயவை என்ன சொல்வோம்? - சீரே

3. பாவப் பிணியாலே பாதகரைப் போலே
சாபத்தை நம்மேல் நாம் தேடினோமே,
கோபத்தைச் சுமக்க குவலயத்தை மீட்க
தீபமாய் வந்த தேவமைந்தனை— சீரே

4. நித்தனே, என் பாவம் எத்தனை யானாலும்
சித்தம் உருகிச் சீர்கூற வேணும்,
அத்தனே, உன்பாதம் அண்டினேன் இப்போதும்;
பத்தியாய் உனைப் பகருவேன் எப்போதும்,- சீரே

S. P.

---

## கிறிஸ்துவின் பாடுகள்.

### 33. பாடுபடும் மீட்பரின் காட்சி.

(42-ம் ஞானப்பாட்டு.)

இராகம்—முகாரி, சாப்புத்தாளம்.

**கண்ணிகள்.**

1. காயம் ரத்தங் குத்துகள் நிறைந்து
கணக்கில்லா நிந்தையுற்று முள்ளால் பின்னும்
தீய க்ரீடத்தாலே சூடுண்ட
திருச்சிரசே முன்னமே

நீயுற்ற மேன்மை எங்கே, கொடும் லச்சை
நீ காணக் காரணமேன், ஐயோ மிக
நோயடைந்தே வதைந்த உன் பக்கமே
நோக்கிப்பணிந்து நின்றேன்.

2. மூலோகமும் பணியும் கதிரோன்
முகத்தின் திருமேனியே எனுந்தனை
பூலோகத்தாருமியும் தீழ்ப்பாயிற்றுப்
பொற்புமிகுஞ் சோதியே
திலோகந் தாங்காதென்றோ வேறுபட்டாய்
ஜீவ பரவெளிச்சம் கண்ஜோதியிக்
காலமே மா இக்காட்டால் இருள் மூடிக்
கலங்கி மங்கினதோ.

3. அன்புள்ள கன்ன ரூபும் ஒப்பில்லா
அழகாம் இதழ் வர்ணமும் வேறரவெட்
டுண்டபுல் பூவையும்போல் உருவற்
றுலர்ந்திடக் காரணமேன்
என் கர்த்தரே ஆண்டவா, நீர்தானே
இறந்திட ஞாயமுண்டோ, பாவந்தரும்
துன்ப மழிவினுக்கும் நானல்லவோ
சொற்படியே பாத்திரன்.

4. நீருற்றவாதையெலாம் மாசுத்தா இந்
நீசன் பாவங்கொணர்ந்த கணக்கரும்
பர்ரமல்லோ, தீங்கும் நோவுஞ் சாவும்
பாவியின் குற்றமல்லோ?
நேரஸ்தன் நானென்றும் மடிய
நிதானமென்றே சொல்கிறேன்; பரா என்மேல்
பார்வை அன்பாய் வையுமேன் உங்கண் அன்று
பட்டதுபோல் குன்றன்மேல்.

5. நான் மாளுங்காலம் வந்தால் என்றன் பிராண
நாயகா நீர்பிரிந்தே இராதேயும்.
நான் தொய்ந்துபோய்க்கிடந்தால் எனக்கு நின்
நன்முகமே காண்பியும்
ஈனமும் என்னுடைய மனக்லேசம்
எந்நேரமும் மெத்தவாம் சகாயரே
ஞானமாய் நீர்சிந்தின இரத்தத்தின்
நற்பலத்தால் ரட்சியும்.

6. ஐயா என் மூச்சொடுங்கிச் சீவன்போகும்
அக்கடைசிக்கட்டிலும் சிலுவையில்
துய்யா நீர் என்றனுக்காய் இறந்த
சுரூபந்தனைக் காண்பியும்.
மெய்யாய் விசுவாசத்தின் கண்ணால் எனின்
மீட்பரை நான் நோக்கி, என் நெஞ்சினில்
ஐயமற அணைத்துக்கொண்டே காத்
தயர்ந்து நான் தூங்கிடுவேன்.

ஞா. சா.

---

## 34. சிலுவைக் காட்சி.

இராகம்—லாவணி, ஆதிதாளம்.

பல்லவி

குருசினில் தொங்கியே குருதியும் வடியக்
கொல்கதா மலைதனிலே—நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர், பாவி,
கொள்ளாய் கண்டுகொண்டு.

சரணங்கள்.

1. சிரசினில் முண்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்தையையோ; தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத்திரள் சூழ —குருசினில்

2. பாதகர் நடுவினில் பாவியினேசர்
பாதகன் போல் தொங்க—யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை —குருசினில்

3. சந்திர சூரிய சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ—தேவ
சுந்தர மைந்த ருயிர் விடுங்காட்சியால்
துடிக்கா நெஞ்சுமுண்டோ. —குருசினில்

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதனில்—அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற் றோடுது பார். —குருசினில்

5. எருசலே மாதே, மறுகி நீ யழுது
ஏங்கிப் புலம்பலையோ! நின்
எருசலேயதிபன் இளமணவாளன்
ஏற்றமா கோலமிதோ. —குருசினில்

ஏ.

---

## 35. ஏதனுதி தேவனே.

ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி

ஏதனுதி தேவனே,—சிலுவை சுமந்
தெங்கே போறீர், என் சீவனே?

### அனுபல்லவி.

ஆதிப் பிதாவின் மைந்தா, அருமைக் கிறிஸ்தானந்தா,
அஞ்சாததம் ஏவை அருந்திய நஞ்சார் கனியாலே விளைந்த
தோ?— ஏத

### சரணங்கள்

1. முந்து மனுடர் தம்மால் வந்த வினையை மாற்றி,
முழுதும் உலகை ஆற்றி, எழுதும் வேதத்தைச் சாற்றி,
தந்தலகையைத் தாழ்த்தி, மைந்தரைக் கரையேற்றித்,
தப்பா துயிர் விடுத்து மெய்ப்பாய் ரட்சிக்கத் தோன்றி— ஏத

2. ஆகம் எல்லாம் புண்ணாக, அடிபட்டிரங்கி நோக,
ஆத்தும வாதைகள் மேவி, வேற்று முகங் குறாவி;
சாகத் தீர்க்கப்பட்டெரு சாலேம் பட்டணம் விட்டு,
தறுகித் தறுகி நின்று, மறுகி மறுகிச் சென்று,— ஏத

3. மெத்த நின்முகம் வாடி, ரத்த வெள்ளங்களோடி,
மெலிந்து முள்முடி சூடி, நலிந்து நடை தள்ளாடிச்,
சத்துருக்களை நாடி, சித்தம் உருகித் தேடிச்,
சாவைத் தொடர்ந்து கொல்கதாவுக்கடர்ந்து கூடி,— ஏத

4. பாவியைக் கை தூக்கவோ? தீ வினையை நீக்கவோ
பரமகதி சேர்க்கவோ? பரனோடுற வாக்கவோ?
மேவித்தற்காக்கவோ? சாவின் துயர் போக்கவோ?
வெற்பனைக் கடாட்சித்தாப்போல் இப்போதும் எனை நோக்க
வோ?— ஏத

வே. சா.

---

## 36. கல்வாரி மலைதனில் கண்டேன்.

தேவகாந்தாரி. ரூபகதாளம்.

தேவாரம்.

1. அன்பர்க்கருள் புரிவோனை, ஆதியாய் நின்ற சிமானை,
துன்பமகற்றிடுங் கோனை, தூயமன மூளத்தானை,
பொன் பொலியும் பெருமானை, பூரண நேசமுற்றானை,
இன்பமளித்திடுந்தேனை, இலங்குந்திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலைதனில்
கண்டேன்.

2. சத்தியவாசகப்போதன், சாற்று முரைப்பிடிவாதன்,
பத்திசேர் சற்பிரசாதன், பாவமகற்றும் பொற்பாதன்,
எத்திசையோர் தேடும் நாதன், இந்நிலம் வந்தமா நீதன்,
முத்தியளித்திடு வேதன், மூவா திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலைதனில்
கண்டேன்.

3. பாவமகற்றும் பகாரன், பசாசுகளுக்கபகாரன்,
ஜீவனளிக்கும் உதாரன், தீவினைபோக்குங் குமாரன்,
சாவையழித்தமாவீரன், தாரணியோர்க்குபகாரன்,
தேவ சுரரேத்துந்தீரன், சோதி திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலைதனில்
கண்டேன்.

4. ஆதியும் அந்தமுமான, அல்பா ஒமேகாவுமான,
நீதி இரக்கமுமான, நித்திய ஜீவனுமான,
ஓதிய வேதமுமான, உத்தம மார்க்கமுமான,
மேதினியிலுருவான மீட்பர் திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலைதனில்
கண்டேன்.

S. P.

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

## 37. உயிர்த்தெழுதலின் பலன்

இராகம்—சகாநு, ஆதிதாளம்.

பல்லவி.

அல்லேலூயா ஜெயமே அமலனெழுந்தார் அதிசயமே.

அனுபல்லவி.

பொல்லாப்பேய் நடுங்கிவிழப்
பொற்பரனின் சேய்கள் மகிழ —அல்

சரணங்கள்.

1. பாவம் பேயொடு மரணம்
பாழன் பேயின்து அரணம்
சீவபாநுல் திரணம்
திடமாயடைவோம் அவர் சரணம். —அல்

2. வலுசிங்கம் சிறையாச்சு
மாற்றானின் வல்லமை போச்சு
அலகையுளதோ பேச்சு
அது விடலாமோ இனி மூச்சு. —அல்

3. திருநாதர் பேயிருபேர்
செய்தார் கொடியதா மொருபோர்
அருணுதர் தாம் ஜெயம் நேர்
அடைந்தார் ஓ! சபையே களிகூர். —அல்

ஞா. சா.

## 38. என் மீட்பர் உயிரோடிருக்கிறார்.

(யோபு. 19, 25.)

இராகம் — இந்துஸ்தானி, ஆதிதாளம்.

### பல்லவி.

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்னகுறைவுண்டு நீசொல் மனமே.

### சரணங்கள்

1. பொன்னோ தொலைந்திடும் மண்ணோ அழிந்திடும்
பூவோ ரொழிந்திடுவார் கணமே
என்னுசைமிகும் யேசுவோ நித்தியர்
எல்லாப் பொருள்விலை கொள்ளாப் பொருளெனும் —என்

2. தாயுதரந்தனிலே யெனை மனுஷனுய்த்
தானுருவாக்கின ஞானபிதா
நேயகுமாரன் தூய உதாரன்1
நிச்சயமாயென்மேல் பட்சமிகுத்தென்றும் —என்

3. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்
விண்ணுலகுயர்ந்தோர் உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுக பத்திரமருளும் —என்

4. பாபமோ, மரணமோ, நரகமோ பேயோ
பயந்து நடுங்கிட ஜெயஞ்சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்
சஞ்சல மினியேன் நெஞ்சமே மகிழாய் —என்

1 தயாளன்.

5. ஆசி செய்திடுவார் அருள்மிக வளிப்பார்
அம்பரந்தனிலெனக்காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்ச வழிசத்யம் வாசல் உயிரெனும் —என்

6. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டுங் கைவிடா திருப்பார்
பவமனிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்
பரமபதவியினுள் என்தனை எடுப்பார் —என்

7. போனது போகட்டும் புவிவசை பேசட்டும்
பொல்லா னம்புக ளெய்திடட்டும்
ஆனது ஆகட்டும் அருள்மழை பெய்திடும்
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள் —என்

ஞா. சா.

---

## பரிசுத்த ஆவியின் பண்டிகை.

### 39. பரிசுத்தாவியின் மகத்துவம்.

இராகம்—ஆனந்தபைரவி, ஏகதாளம்.

பல்லவி

சுத்தபரன் சுத்த ஆவியே நின்மாமகிமை
சொல்லவரம் எனக்கீவையே •

அனுபல்லவி.

மெத்தவும் அசுத்தன் நானே
மேவினேன் நின் பாதந்தானே
உத்தமனம் கெஞ்சுவேனே
உன்னையல்லா லழிவேனே. . —சுத்த

**சரணங்கள்.**

1. அடியேன் புத்திபலத்தினுல் என் ஆத்மமீட்பர்
அருளைப் பெறவும் போகுமோ
மிடியுறும் ஏழைச்சிஷ்டி தான் மனந்திரும்பி
விசுவாசங் கொள்ளலாகுமோ.

கடினம் என் மனங்கல்லு
கத்தா ஓர் வார்த்தை சொல்லு
திடசீவன் வரக்கொல்லு
சேவடி நீ சேர்த்துக்கொள்ளு. —சுத்த

2. சுவிசேடத்தின் தொனியினுல் எனையழைக்கும்
சுகிர்தந்தனை யானறிந்தேன்
உவந்தளிக்கும் வரங்களால் என் இதயத்துக்
கொளிதருவதை யுணர்ந்தேன்.

அவமாகா மெய்விஸ்வாசம்
அதனுல் தூய்மை நன்னேசம்
கவர்ந்துனைத் தொழும்பாசம்
கனிந்தளித்தாய் நல்வாசம். —சுத்த

3. பேயுடல் உலகின் தீ விஷம் தொடாப்படிக்குப்
பேணுவதும் நின் கிருபையே
சாயும் விழுந்துயிர் போகையில் பலங்கொடுத்தைங்
காயனை நீ காட்டிடுவையே.

நேயனே பரிசுத்தாவி
நீ வாராயோ ஏழைகூவி
பாய்கிறேன் மான்போலே தாவி
பிரிவுசெய் நான் ஏழைப்பாவி. —சுத்த

4. பூமியெங்கும் உள்ள சபையை வரவழைத்துப்
பொற்புற[1] விணைத்துச் சேர்த்து
சாமியொளிதந்து தூய்மை அளித்துயேசு
தற்பரனில் நித்தங்காத்து.

க்ஷேமகரஞ்செய்யும் நேயா
தின்மையைப் பகைக்குந் நேயா
பாமரர்க்கு நற்சகாயா
பார்த்திபா என்றென்றும் மாயா. —சுத்த

5. நித்தமும் பவம் பொறுக்கிறாய் திருச்சபையில்
நீதிதீர்வை நாளிலேயன்பாய்
செத்த விசுவாசிகளையும் என்னையும் உடல்
ஜீவனோடெழுப்புவா யின்பாய்.

நித்திய ஜீவன் தருவாய்
நின்மலன் யேசுவை மெய்யாய்ப்
பத்தியாகவே மனம்வாய்
பற்றினோர்க்கு மா தயவாய். —சுத்த

ஞா. சா.

---

## 40. பரிசுத்தாவிக்கு விண்ணப்பம்.

இராகம்—பைரவி, திரிசுரதாளம்.

பல்லவி

தீயமனதை மாற்ற வாரும், தூய ஆவியே!—கன
நேயமேவியே,

சரணங்கள்.

1. மாய பாசத்தழுந்தி வாடி, மாளும் சாவிதால் மிக
மாயும் பாவி நான் —தீய

1 அழகு.

2. தீமைசெய்ய நாடுமென்றன் திருக்கு நெஞ்சமே—மருள்
தீர்க்கும் தஞ்சமே! —தீய

3. பரத்தை நோக்க மனமற்றேனே பததி[1] தான்ஐயா—ஒரு
பாவி நான் ஐயா! —தீய

4. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே—அதைப்
புகழ்ந்து காக்கவே. —தீய

5. எக்கத்தோடென் மீட்பைத்தேடி இரந்து கெஞ்சவே—
தினம் இதயம் அஞ்சவே —தீய

6. கிறிஸ்துமீது நாட்டங்கொண்டு; கீதம்பாடவே—அவர்
கிருபை தேடவே —தீய

7. தேவவசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே—மிகு
தெளிவு துன்னவே —தீய

[மிகச்
8. ஜெபத்தின்தாகம் அகத்தில்ஊறி ஜெபித்துப் போற்றவே—
சிறப்பாய் எற்றவே —தீய

சத். உப.

---

## மசியோன் ஸ்தோத்திரப் பண்டிகை.

**41.**

இராகம்—உசேனி, ஆதிதாளம்.

பல்லவி.

துதி துதி பரன்றனையே—சுகிர்தமாக.

சரணங்கள்.

1. துதி துதி பரனையே துல்லிய நிர்மலனையே
கதிதரு காரனையே கர்த்தாதி கர்த்தனையே —துதி

1 பதர்.

2. இருளின் ராஜாங்கம்வென்று இரவி[1] யாரணங்[2] கொண்டு
மருள்வீண்பத்தியினின்று வல்லன் ஜெயித்தாரென்று - துதி

3. சுவிசேட எக்காளம் தொனித்தவுடன் வேதாளம்
பவுஷை யிழந்தகோலம் பார் இந்தநற்காலம் — துதி

4. சீகன்பால் தென்றவொரு திட விசுவாசகுரு
வாகதாய்ச் சேர்த்த சிறு மந்தை வளர்தல்பாரு — துதி

5. இத்தனை யாண்டாக இயேசுவை நன்றாகப்
பத்தர்கள் பணிவாகப் பரிவாய்ப் போதித்தற்காக — துதி

6. நேயன் யேசுவைத்தேடி நிதமவர் பதம்நாடித்
தூயன்றனைக் கொண்டாடி சுபகீதங்களைப் பாடி — துதி

ஞா. சா.

---

## 42.

### எல்லாரையும் சேர்க்கும் தேவகிருபையைப் புகழ்தல்.

இராகம்—பிலகிரி, ஆதிதாளம்.

பல்லவி

பூமியின் குடிகளே நீர் தாமதமிலாதியேசு
சாமியினன்மைமதிலே மகிழுவீர்.

அனுபல்லவி.

ஓமனுதியந்தபரனே மனுடரானநம்மை
உருக்கமாய்த்—தங்கருணைப்
பெருக்கமாய்—மீட்டரணைந்
துருக்கமாய்—இதுவரைக்கும்
நெருக்கமாய்—ஊக்கமாய்நின்றூர் —பூமி

1 சூரியன். 2 வேதம்.

### சரணங்கள்

1. தந்தையார் தமதுநேச மைந்தனைப் பாதகர்க்காகத்
தந்துமா நிர்ப்பந்தமற விந்தையாகவே
இந்த நீசமான பூலோகந்தனை மீட்ட நேசத்தைச்
சிந்தையில் நினைந்து முழு நன்றியாகவே
சந்ததமுமே துதிப்ப தந்தமான வேலையல்லோ
தாசரே—யேசுநாதர்
நேசரே—எருசலேம்
வாசரே—கர்த்தருக்குள்ளாம்
ராசரே—ஆசாரிமாரே —பூமி

2. கர்த்தனர் ஒருவரே நம் நித்திய பரமனென்ற
சத்தியத்தை எத்தினமும் உற்றுணருவீர்;
அத்தனர் படைப்புகளைப் புத்தியற்றுத் தெய்வமெனச்
சொற்றவரே விக்கிரகப் பத்தியகல்வீர்
இத்தரையில் நாங்களல்ல உத்தபரன் எங்களைக்கண
ணேக்கினர்—எங்கள்பவம்
போக்கினர்—சகல துன்பம்
நீக்கினர்—தமது மந்தை
ஆக்கினர்—தூக்கினரென்று —பூமி

3. ஜீவபரன் வாசல்களில் மேவி எய்துவோம் துதியோ
டாவியுடனே நமது நாவுமிசைந்து
தேவ பிரகாரங்களிலே வருவோமே புகழ்ச்சி
மாவுரிமை யோடுரைத்துக் கூவி மகிழ்ந்து
பாவலர் மற்றோரேநல்ல நாவலரே கர்த்தர்வீட்டுக்
கோடுவோம்—அவர்நாமத்தில்
கூடுவோம்—அவர்பதத்தை
நாடுவோம்—அவர்மகிமை
தேடுவோம்—பாடுவோம் துதி —பூமி

---

ஞா. சா.

# சீர்திருத்தற் பண்டிகை.

## 43. சீர்திருத்தற்காகத் தோத்திரம்.

இராகம்—அரிகாம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

பஜித்திடும் சுவிசேட திருச்சபையோரே.
பரனை ஸ்மரித்துத்[1] தினம் மகிழ்வீரே.

சரணங்கள்.

1. பஜித்திடும் சுவிசேஷசபைக்குள் வந்தோரே
பரனருளால் ஜெயமடைந்தீரே
துஜம்[2] பிடித்தே ஜெயமெனப் புகல்வீரே
தோத்ரசங்கீர்த்தனம் துத்யம் செய்வீரே. —பஜி

2. நித்ய சுவிசேடமே நேர்வழியாமே
நிமலனருள் வழிபோவோமே
சத்ய மறைபிடிக்கில் வழிதவறோமே
தத்வ[3] குணாகரன் தனைத்துதிப்போமே. —பஜி

3. திருக்குருசில் மரித்தோனது நேசம்
தினம் மறவாதே, வைவிசுவாசம்
இரக்க புண்ணியங்களால் எழில்[4] நகர்வாசம்
இனிபெறலாமென வெண்ணுதல் மோசம். —பஜி

4. சர்வபரிபாலன சற்குரு நீதன்
சபையனைத்திற்குமே தலைநாதன்
கெர்வமிகு பாப்புவோ கெடுமதிபோதன்
கெடுமதிபிரிந்ததால் துதிப்பமே வேதன். —பஜி

ஞா. சா.

---

1 நினைத்து. 2 கொடி. 3 சகலநற்குணங்களுக்குமிடமான. 4 அழகிய.

**44.**

இராகம்—இந்துஸ்தானி தாளம் ஆதி.

பல்லவி.

ஆனந்தப்பண் பாடுவோமே
ஐயனருள் கொண்டாடுவோமே—ஆ

சரணங்கள்.

1. ஞானப்பரதேவனவர் நல்வசனமீந்தாரின்று
கானத்தால் நாம் போற்றிசெய்து கர்த்தனைப்பனிவோம் [நின்று

2. ஞானிலுத்தராலே தேவன் நாம் மறை கண்டு மகிழ
ஈனக்கொள்கைகள் தகர்த்தார் இன்னும் நாமமே திகழ—

3. சிப்பியினுள் முத்துப்போல ஜீவவசனம் மறைய
ஒப்பிலாலுத்தர் ஞானியால் உலகெங்குமே நிறைய—

4. தொண்ணூற் றைந்து ஞாயங்களை தொகுத்தெழுதி ஒட்டினர்
எண்ணிறந்த துன்பங்களை எதிர்த்தறவே ஓட்டினர்

5, சுத்தபோதகத்திலே நாம் நித்தமும் நிலையே கொள்வோம்
உத்தமனேசு அருளால் உலகின் சோதனை வெல்வோம்—

K. G.

---

## அறுப்பின் பண்டிகை.

**45.** சேர்ப்பின் ஸ்தோத்திரம்.

இராகம்—அசாவேரி; தாளம் ஆதி.

பல்லவி

அமலா அருள்தாராய் அறுப்பின் பண்டிகை இன்று (அ)

### அனுபல்லவி.

கமலமலர் பொற்பாதா கனிந்து வருவாய் வேதா
காத்துரட்சித்தாள் நாதா கருணைநிறைந்த போதா (அ)

### சரணம்.

1. எண்ணிற்கடங்கா நன்மை எத்தனையோபுரிந்தீர்ஸ்வாமி
இன்னல் பலவிலக்கி இனிது எங்களைக்காத்தீர்
அண்ணலே அருள்மொழி அளித்துப்பராமரித்தீர்
உன்னன்பினாலே எங்கள் உளங்களிக்கவும் செய்தீர் (அ)

2. தசமபாகமதை தாராளமாயுமக்கு ஸ்வாமி
நிஜமனதுடனீந்து நிதமும்நினைப்பூஜித்து
ஆசையுடனுமது அடிபணிகின்றோமையா
ஆசீர்வதித்தெங்களை அன்பாய்க்கொள்ளுவீரையா (அ)

3. சிறுமையான விதவை செலுத்தியகாசுபோல ஸ்வாமி
வறுமையிலுமுமக்கு அருமைப்பொருளீயவும்
பெருமை கொள்ளாது பூவில் பிறரைச் சிநேகிக்கவும்
அருமையானநினது அருள்மொழியைக் கொள்ளவும் (அ)

K. G.

---

## 46. ஆண்டவரே தோத்ரம்.

சங்கராபரணம். ஆதிதாளம்.

1. வானமும் பூமியும் வகித்திடுந்தேவே!
வளம்நிறை ஆண்டவரே!—தேவரீர்
ஈனராம் எம்மேல் இரங்கி யிவ்வறுப்பை
ஈந்ததற்காய்த் தோத்ரம்!

2. பாவம்நிறைந்தோர், பாத்திரமற்றோர்,
கோவத்துக்கேயுரியர்;—வறியர்
ஆயினர் எமக்கிவ்வறுப்பை யளித்த
ஆண்டவரே, தோத்ரம்!

3. வான மன்னாவை வருஷித் திஸ்ரேலை
வருடநாற்பது காத்தீர்!—அந்த
வல்லமை எமக்கிவ் வருடமுங்காட்டிய
நல்லவரே, தோத்ரம்!

4. ஐந்தப்பங்கொண்டை யாயிரம்பேரைப்
பைந்திடல்போஷித்தீர்;—பகவா
போதளம் பசியும் புறமுறச்செய்தீர்;
புண்ணியரே தோத்ரம்!

5. பெரிய உம்நாமம் பேருலகோங்க,
வறியவர் மிடியகல,—இவ்வீவை
அறிவுடன்காத்து அருமையாய் ஆளும்
நெறியெமக் கீந்தருள்வீர்!

6. திருச்சபைப்பண்ணை திகழ்பயிர் நாங்கள்
தேவரீர் பயிர்க்காரர்.—திருவே,
ஆவியின் மழையால் ஆக்கிடும், எம்மை
அழகிய கதிர்மணியாய்!

V. D.

## ஜெபம்.

## 47. பத்தியாய்ச் ஜெபம் பண்ணவே.

தேவாரம்

1. பத்தியாய்ச்செபம் பண்ணவே
சுத்தமாய்த்தெரி யாதய்யா
புத்தியோடுமைப் போற்றநற்
சித்தமீந்திடும் ஜேசுவே.

2. பாவபாதையை விட்டுநான்
ஜீவபாதையிற் சேரநல்
ஆவிதந்தெனை யாட்கொளுந்
தேவதேவ குமாரனே.

3. ஆசையோடுமக் காட்செயும்
மாசிலாமனம் நல்கியே
நேசம்வைத்தெனை ரக்ஷியும்
யேசுநாத சுவாமியே.

4. இரவில்மோசமொன் றின்றியே
உரிமையாயுறக் காட்டினை
பரமனேபதி ளுயிரம்
சரணம்யேசு தயாபரா.

5. துட்டரோடுற வாடி நான்
மட்டிலாத துன் மார்க்கனுய்க்
கெட்டிடாவகை கிருபைசெய்
தட்டிலாத தயாபரா.

6, இந்தநாளிலெப் பாவமும்
சிந்தையாலுஞ் செய்யாமலே
முந்தவுன்கிருபை தந்துகா
வந்தனமனு வேலனே.

M. A. K.

---

## 48. ஜெபமறவாதே நேசனே.

இராகம்—கமாஸ், ஆதிதாளம்.

பல்லவி

ஜெபமறவாதே நேசனே—எக்காலமும்நீ.

**சரணங்கள்**

1. ஜெபம் பரமனுடன் பேச்சு
தேவை யெல்லாமத்தா லாச்சு
தப விசுவாசி மூச்சு
தகாதெலா மத்தாற் போச்சு —ஜெப

2. அம்பரன் கற்பனை நோக்கு
அவர தருமை வாக்கு
நம்பிச் சந்தேகத்தைப் போக்கு
நலம் வரத் தீமை நீக்கு —ஜெப

3. பேயை ஜெபத்தோடு வென்ற
பிரிய நாமமுங் கொண்ட
நேய சுதன்தனைத் தந்த
நின்மலனுக்கே யுகந்த —ஜெப

4. விசுவாச நேசத்தோடு
மிகும் பத்தியோடு நாடு
நிசமாய்ப் பரனைத் தேடு
நேர்மையுடனே ஓடு —ஜெப

5. பகலுட னிரவிலும்
பணிவுடன் குறைவிலும்
திகிலிலும் மகிழ்விலும்
செல்வம் வறுமையிலும் —ஜெப

6. தேவ அரசாட்சிக்காக
ஜெபி உந்தன் குறைபோக
ஆவலுடன் பிறர்க்காக
அன்புடன் ஜெபிப்பாயாக —ஜெப

7. மறந்திடாதே ஜெபமே
மறக்கில் நீ ஓர் சவமே
சிறந்த உன் வீடவமே
செய்ய லாமோ பவமே —ஜெப

ஞா. சா.

---

## 49. ஜெபம் செய்யப் போதித்த ஜெகநாதா.

### திருப்புகழ்

இராகம்—கல்யாணி தாளம் ரூபகம்.

1. ஜெபம் செய்யப்போதித்த ஜெகநாதா—சதா
திருமுறை புகழ்கின்ற குருநாதா

2. தவம்செய்து காட்டிய தனபாலா—எந்தன்
சஞ்சலம் நீக்குவாய் குணசீலா

3. பாதத்தரிசனம் கொடுப்பாயே—இந்த
பாவிக்கருள் தந்து விடுப்பாயே

4. அன்னைபாசத்தோடு வருவாயே—தினம்
என்னை அணைத்தாவி தருவாயே

5. பணி செய்து தொழுவதே என்பாகம்—எல்லாப்
பாவங்கள் போக்குதலுன்பாகம்

6. உடல்பொருளாவிதான் உன்பாகம்—அன்று
உதிர்த்ததிருரத்தம் என்பாகம்

7. அடிமைநான் என்னைவிட்டகலாதே—உந்தன்
கடமைதான் காப்பது மறவாதே

8. பரலோகராஜனே வருவாயே—போற்றும்
பாவியைப் பார்த்தாசீர் புரிவாயே

---

**50.** காலை ஜெபம்.

## ஐயனே உமது திருவடிகளுக்கே

இராகம்—பியாகு. ஆதிதாளம்

### கண்ணிகள்

1. ஐயனே உமது திருவடிகளுக்கே
ஆயிரந்தரந் தோத்திரம்
மெய்யனே உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம்மாத்திரம்.

2. கண் விழிபோலவே அடியேனைக் காத்த
கர்த்தனே நமஸ்காரம்
மண் மிசையும் மாலன்றி யிப்பூச்சி
வாழுமோ இந்நேரம்

3. சென்ற தாமிரவில் தேவரீரென்னைச்
சேர்த்த ரவணைத்தீரே
அந்தடை வாயிப்பகலிலுங் கிருபை
யாக வா தரிப்பீரே.

4. ஊழியந்தனை நான் உண்மையாய்ச் செய்ய
உதவி நீர் செய்வீரே
ஏழை நானுமக்கே இசைய நல்லாவி
இன்பமாய்ப் பெய்வீரே.

5. அத்தனே யுமது மகிமையை நோக்க
அயலான் நலம்பார்க்க
சித்தமாயருளும் மெய் விசுவாசம்
தேவனே உமக்கேற்க.

6. இயேசுவின் முகமே நோக்கி நீர் ஐயா
ஏழையின் செபங்கேளும்
தாசனை யுமது இராச்சியந்தனில் நீர்
தற்காத்தேயாளும்.

ஞா. சா.

## 51. மாலை ஜெபம்.

(லூக். 24: 29.)

ஐயரே நீர் தங்கும்.

இராகம், சங்கராபரணம். ஏகதாளம்.

கண்ணிகள்.

1. ஐயரே நீர் தங்கும் என்னிடம்
ஐயரே நீர் தங்கும்—இப்போ
தந்திநேரம் பொழுதஸ் தமித்தாச்சே
ஐயா நீர் இறங்கும்.

2. தங்காதொரு பொருளும்—என்னிடந்
தங்காதொரு பொருளும்—இயேசு
தற்பரனே நீர் ஒருவரேயென்னில்
தங்கித் தயை புரியும்.

3. உயிரே துமையன்றி பாவிக்
குயிரே துமையன்றி—என் தன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா
உத்தமனே தங்கும்.

4. நீர் தங்கிடும் வீட்டில் இயேசுவே
நீர் தங்கிடும் வீட்டில்—எல்லாம்
நிறைவே, குறைவுண்டாமோ கர்த்தா
நின்னை விடமாட்டேன்.

5. என் பாவம் மன்னியும் இறையே
என் பாவம் மன்னியும்—அப்போ
தெளியேனும் மோடயர் வேனிரவில்
எனக்கோர் திகிலேது.

6. உம்மோடே படுப்பேன் ஐயா,
உம்மோடே படுப்பேன்—இரவில்
உம்மோடயர்வேன் சேதமில்லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்.

7. மரணஞ் ஜெயித்தோர் நீர் மெய்யாய்
மரணஞ் ஜெயித்தோர் நீர்—உம்மால்
மரணமே கூரெங்கே நரகேனின்
வலுஜெய மெங்கென்பேன்.

ஞா. சா

---

## 52. கர்த்தருடைய ஜெபம்.

பரமண்டலங்க ளிருக்குமெங்கள்
பிதாஉன்னுமம் அர்ச்சிக்கப்
படஉன் றனின்ராச் சியம்வருகப்
பரத் துன்சித்தஞ் செய்வதுபோல்

தரைமண்டலத் துஞ் செய்யகித்தந்
தரும்எம்அப்பம் இன்றெமக்குந்
தாருமெங்கள் கடன்காரர்
தமக்குநாங்கள் பொறுப்பதுபோல்

நிரைகொண்டெமக்கும் பொறுத் துவிடும்
நெடுஞ்சோதனைக்குட் படப்புரியாய்
நீக்கித்தீங்கை இரட்சைசெயும்
நிலைராச்சியம்வல் லபமகிமை

உரைகொண்டுமக்கென் றென்றைக்குமே
உண்டாயிருக்கு தாமனென
ஓதச்செபத்தின் முறைமையெமக்
குரைத்தாய்வேதத் தொருமுதலே.

வே. சா.

---

## ஞானஸ்நானம்

### 53. குழந்தை ஞானஸ்நானம்.

இராகம்—பிலகிரி, செம்படைதாளம்.

பல்லவி

இந்தக் குழந்தையைநீர் ஏற்றுக்கொள்ளும், கர்த்தரே.

அனுபல்லவி

உந்தன் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய்வந்த —இந்த

சரணங்கள்

1. பிள்ளைகள் எனக்கதி பிரியம், வரலாம் என்று
உள்ளமுருகிச்சொன்ன உத்தம சத்தியனே —இந்த
2. பாலகரைக் கையில்ஏந்திப் பண்பாய் ஆசீர்வதித்த
சீலமா யின்றும்வந் தாசீர்வாதம்செய்யும், ஐயா —இந்த
3. உமக்கூழியம் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத்தந்து உம்முடைய மந்தைசேர்த்து —இந்த
4. உலகமும் பேய்பசாசும் ஒன்றும் தீதுசெய்யாமல்,
நலமாய் இதைக்காத்தருளும் நன்மைப் பராபரனே —இந்த
5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கு உள்ளடங்கி
பசியமரம்போல் தெய்வபக்தியிலே வளர —இந்த

பி. பா.

---

## 54. ஞானஸ்நானப் போதகம்.

இராகம் — காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி

ஞானஸ்நானமா ஞானதிரவிய மேதிரு
நாமம் ஜலமொடுசேர்.

சரணங்கள்

1. வானபரன் யேசுலக மானிடர்க்காய்ப் பாடுபட்டு
வாய்த்தநல மிலவசமாய்க் கொடுத்திட
ஞானமுட னேசகல மானிடரைச் சீடராக்க
நல்லதேவ நாமமதைச் சொல்லிஜலம் வாருமென்ற —ஞா

2. யேசுமெய்யா யெந்தனுட நேச மீட்பரென்றுள்ளத்தில்
ஏற்றுமுழுக்கே பெறுவோர் கூற்றுநீங்குவர்
வேஷமும்பொல்லா அவிசுவாசமுமுள்ளோர் நரகில்
வீழ்வர் நித்தியமானகாலம் தாழ்வரென்றுரைத்தவரின் -ஞா

3. தண்ணீராவியால் பிறக்கார் விண்ணலம் பெறாரெனவே
சத்திய னுரைத்தமொழி சுத்தமுணர்ந்து
சின்னவர் பெரியவர்கள் சீரியர்கள் பூரியர்கள்[1] —ஞா
செம்மைபெற மூழ்குவர்கள் இம்முழுக்கில் வேதமுறை—
[சொல்லிக்

4. கண்ணினுலே காண்பதென்ன தண்ணீர்தானேயென்று
கத்தனி னுரைமறப்ப தெத்தனை மோசம்
அண்ணலார்[2] பரிசுத்தாவி தன்னையுமிணைக்கு நேர்மை
அறிந்தவரே யிருகண் தெரிந்தவர் திருவருள் —ஞா

5. பாவங்கள் மன்னிக்கப்படும் சாவுபேயின் வன்மைநீங்கும்
பாக்கியத் தலங்கிடைக்கும் வாக்கியம் பொய்யோ
சீவிய முழுக்கிதுவே ஒவிய முழுக்குமறு
சென்மமுழுக்கு புதிய தன்மைதரும் தூய்முழுக்கு —ஞா

1 கீழ்மக்கள். 2 அரசர்.

6. எத்தனைபேரிம்முழுக்கைப் பெற்றனரோ அத்தனைபேர்
யேசுவைத் தரித்தாரென்று நேசமுடனே
கத்தனுருரைபகரப் பித்தர்களின் துன்மொழியால்
கலங்கிடோம் நன்னெறியில் துலங்கிடுவோ மிச்சுத்த—ஞா

ஞா. சா.

---

# இராப்போசனம்

## 55. இராப்போஜனத்துக்கு அழைத்தல்.

இராகம்—சங்கராபரணம், திரிசுரதாளம்.

பல்லவி

கர்த்தரின் பந்தியில் வா, சகோதரா!
கர்த்தரின் பந்தியில் வா;

அனுபல்லவி

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி, —கர்த்த

சரணங்கள்

1. ஆபேலின் ரத்தம் அல்ல, நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல, சிந்துண்ட
தயையை நான் என்ன சொல்ல?
கோபம் இல்லாமல் உன் மாபாவம் தீர்த்திடக்
கூறிப் பிதாவின் முன் ஏறின ரத்தமே: —கர்த்த

2. ஜீவம் அப்பம் அல்லோ? கிறிஸ்தின்
திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? உனக்காய்ப்
பகிரப்பட்டதல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்று பிழைத்திடக் —கர்த்த

3. தேவ அன்பைப்பாரு, கிறிஸ்துவின்
சீஷர் துயர் திரு;
பாவக்கேட்டைக் கூறு; ராப்போஜன
பந்திதனில் சேரு
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே —கர்த்த

4. அன்பின் விருந்தாமே, கர்த்தருடன்
ஐக்யப் பந்தியாமே,
துன்பம் துயர்போமே, இருதயம்
சுத்த திடனுமே,
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா —கர்த்த

---

## 56. நற்கருணை.

இராகம்—காம்போதி, ரூபகதாளம்.

பல்லவி

போசனந்தானுமுண்டோ—திருராப்
போசனம் போலுலகில்.

அனுபல்லவி

ராசரும் வையக நீசரும் அம்பரன்
நேசரும் இயேசுவின் தாசரும் உண்டிடப் —போச

## சரணங்கள்

1. கத்தன் மரணத்தின் சாசன போசனம்
கன்மிகட் கானமெய் நேசத்தின் போசனம்
பத்தரை யொன்ரு யிணைத்திடும் போசனம்
பஞ்சகாலத்தும் கிடைத்திடும் போசனம் —போச

2. பூர்வ எற்பாட்டோர்கள் காணுத போசனம்
பொன் வானதூதரும் உண்ணுத போசனம்
ஓர்க் காலமும் குறைவாகாத போசனம்
ஒப்பில்லான் மாமிசம் ரத்தமாம் போசனம் —போச

3. பஸ்காப் பலியின்பொருள் என்னும் போசனம்
பாவி புசிக்கும் சமாதான போசனம்
நிஸ்கார நிந்தைப் பவம்போக்கும் போசனம்
நின்மலன் தந்திடும் அற்புத போசனம் —போச

4. மாமலேப் பீடப் பசியான போசனம்
மானிட ஞானத்துக் கெட்டாத போசனம்
ஆமென்று நாங்கள் போதித்திடும் போசனம்
அத்தனுர் மெய்மொழியாலான போசனம் —போச

5. மாமிச மப்பத்தோடே வரும் போசனம்
வல்லன் ரத்தம் ரசத்தோடுறும் போசனம்
பூமியில் மோட்சங் கொணர்ந்திடும் போசனம்
பொய்க் கிறிஸ்தோர்களுக் காக்கினேப் போசனம் —போச

6. ஒப்பனே யென்னக் கூடாதமெய்ப்போசனம்
ஒன்று மற்ருென்ருக மாருத போசனம்
தப்பற நாங்கள் புசித்திடும் போசனம்
சந்தோஷப் பாவப் பொறுப்பீயும் போசனம் —போச

7. செத்தும் உயிரோ டெழுப்பிடும் போசனம்
சீவனே டென்றென்றும் வாழ்விக்கும் போசனம்
நித்த முண்டாலும் சலிக்காத போசனம்
நேச சஞ்சீவி யெனுந்திருப் போசனம் —போச

ஞா. சா.

## விவாகம்.

**57.** எசு நாயகா வந்தாளும்.

கேதாரகௌள. ஆதிதாளம்.

பல்லவி

எசு நாயகா, வந்தாளும்;—எந்நாளும், திவ்ய
எசு நாயகா, வந்தாளும்!

அனுபல்லவி

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக,—எசு

சரணங்கள்

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மணவீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போலே, அன்பாலே,— எசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பத்தி விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்று வாழ, மிக வாழ,— எசு

3. துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க,— எசு

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகிப்
புத்திர சந்தானமே செழிக்க, தழைக்க,— எசு

வே. சா.

## 58. இம்மணர்க் குன்னருள் ஈ.

நாதநாமக்கிரியை. சாபுதாளம்.

பல்லவி

இம்மணர்க் குன்னருள் ஈ, பர வாசா,
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

சரணங்கள்.

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்;
தேவரீர் இவ்விரு பேரையும் காரும்;— இம்

2. ஆதமோ டேவையை அன்றமைத்தீரே,
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே;— இம்

3. அன்பன் ஈசாக்கு ரேபக்காட் கிரங்கி,
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர்.— இம்

4. உன் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும்.— இம்

5. தாழ்மை பொறுமைகள், சற்குண மேன்மைகள்
தந் தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன்.— இம்

6. இயேசுகிறிஸ் துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும்.— இம்

P. P.

---

# துன்ப துயர காலம்.

## 59. ஆரும் துணை இல்லையே.

முகாரி. சாபுதாளம்.

பல்லவி

ஆரும் துணை இல்லையே, எனக்
காதியான் திருப்பாலா;—உன் தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், ஏசுநாதா.

### அனுபல்லவி.

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினிலே உயிர்விடும்
தேவனே, என் சுவாமி!— ஆரும்

### சரணங்கள்

1. முந்து மானிடர் தந்த தீவினை முழுவதும் அறவேண்டியே
முன்முடியுடன் குருசில் ஏறிய முன்னவா, கிருபை கூர்வையே;
சிந்தும் உன் உதிரத்தில் என் வினை தீர்த்திரட்சியும், ஐயனே;
தீய பாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை இல்லையே
—ஆரும்

2. தந்தை தாயாரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே!
சாகும்நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும் உண்டுமோ?
சொந்தம் நீ எனக்கன்றி, வேறொரு சொந்தமானவர் இல்லையே;
சுற்றமும், பொருள் அத்தமும் முழுபத்தமே, என தத்தனே!
—ஆரும்

3. கள்ளனுயினும் வெள்ளனுயினும் பிள்ளை நான் உனக் கல்லவோ?
கர்த்தனே, வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே
தள்ளி என்னைவிடாமல் உன்னடி தந்து காத்தருள், அப்பனே,
தயவாக ஒரு குருசில் ஏறிய சருவ ஜீவ தயா பரா!--ஆரும்

4. நன்றி அற்றவனாகிலும், எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமேபடும் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடின தில்லையோ?
கொன்றவர்க் கருள் செய்யும் என்று பிதாவை நோக்கிய
கொற்றவா,
குற்றம் ஏது செய்தாலும் நீ, எனைப் பெற்றவா, பொறுத்தாள்
வையே— ஆரும்

---

## 60. கல்லும் அல்லவே காயம்.

காபி. ஆதிதாளம்.

பல்லவி

கல்லும் அல்லவே—காயம்,—வல்லும் அல்லவே—இது.

அனுபல்லவி

வெள்ளி, பொன் விலைமதியா மேரும் அல்லவே,— கல்

சரணங்கள்

1. வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய்;—அதால்
நல்ல வழி தேடி, தேவ நாமத்தைத் தியானி.— கல்
2. சூரியன் கீழ்க் கண்டதெல்லாம் மாயை அல்லவோ?—சால்
மோன்
பார் அரியச் சொன்னதை நீ பார்த்தறியாயோ?— கல்
3. காற்றடித்த மேகம் புகைக்கொப்பதாகவே,—இங்கே
போற்றிய மனுடர் ஜீவன் போய் ஒழியுமே.— கல்
4. வேகமாய் வடியும் ஆற்றுக் கொப்பதாகவே,—மாய
தேக நரர் நாட்களும் சீக் கிரம் கழியுமே,— கல்
5. இராப் பகல், இருள், வெளிச்சம் மாறும் வண்ணமே,-ஐயோ
நராட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே.— கல்

6. பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும்;—அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும்.— கல்

7. மேலது கீழ், கீழதுமேல் ஆம் உருளைபோல்,—நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே.— கல்

8. நுண்ணிமை ஞானி என்றாலும் கீர்த்திபெற்றாலும்,-ஐயோ
அன்னவன் மலையும் நேரம் யாவும் கலையும்.— கல்

9. ஆசனம், துரைத்தனம், தத்துவங்கள் ஒழியும்;—அர
சாண்ட மன்னரும் ஒரு நாள் மாண்டொழிவார்கள்.— கல்

10. யாவும் ஒட்டமாகப் பாயும், யாவும் அழியும்;—மெய்
தேவபக்தியே செலிக்கும்; ஜீவன் நிலைக்கும்.— கல்

வே. சா.

---

## 61. பொன்னகர் போகும் புண்ணியர்களே.

காபி. ஆதிதாளம்.

பல்லவி

பொன்னகர் பயணம் போகும் புண்ணியர்களே,—
மகிமை
என்னவென் றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

சரணங்கள்

1. உன்னத சுதனுக் கேதும் ஒப்புமை யுண்டோ?—அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மை யருமை.— பொன்

2. லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே;—அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே.— பொன்

3. வந்தழைத்துப் போயென்னோடு வைப்பே னென்றவர்—
இன்று
வந்தழைத்துப் போகு மேன்மைமாந்தருக் குண்டோ?—
பொன்

4. மண்ணினு லுண்டான வுடல் மண்ணேயாயினும்,—யேசு
தன்னுரு வோடே யெழுப்பும் சத்திய மிதே.— பொன்

5. கண்ணீர் துடைத்தெம்மையாற்றும் கர்த்தாருகில்—சென்
[றோர்
நண்ணியே ஜீவகனி யுண் டின்னல் நீங்குவார்.— பொன்

6. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனங் கண்டு—புதுப்
பாட்டுகள் பாடிடும் சுத்தர்க் கூட்டமடைந்தார்.— பொன்

7. கர்த்தருக் குள்ளே மரிப்போர் பாக்கிய ரென்று—சொல்லும்
உத்தம வேதத்தி னுண்மை யுன்னத மல்லோ?— பொன்

G. S. V.

---

## 62. மோட்ச வாஞ்சை.

(280-ம் பிரார்த்தனை.)

இராகம்—பைரவி, சாப்புத்தாளம்.

கண்ணிகள்.

1. வெகுபேர்களுக் கின்பமான
மேதினியே நீ என்தனுக்கு
மிகவும் திகில் கசப்பாம்பர
தேசம் இது மெய்யலோ
ஜெகந்தன்னைமா ஆசையாய்ப் பற்றும்
ஜெகத்தோரத்தால் வாழட்டும்
தேவரீருட பேரிலே மெத்தத்
தேட்டமாகினேன் யேசுவே

2. யேசு நீர் தரிசனை தந்தெனை
யேற்கும் நன்மைக்காய் யாவையும்
எளியேன்வெறுத் திந்தலோகத்தின்
இன்பவாழ்வினைக் குப்பையாய்

மோசமின்றுநா னெண்ணுவேன் நீரென்
மோக்ஷம் கதி ஆஸ்தியும்
முன்னவா அடியே னும்மோடென்றும்
முற்றுங்கூடினல் பாக்கியன்.

3. தங்கள் வர்த்தக நோக்கமாய்க் கப்பல்
தன்னிலே பல ரேறியே
சங்கடத்துடன் தூரமாய்க் கடல்
தன்னில் யாத்திரை செய்யட்டும்
அங்கென்மீட்பரி னண்டை போமட்டும்
ஆசை தேவரீருக்குநே
ராகவே அடியேனும் பாய்விரித்
தாவலாய் ஓடிநாடுவேன்.

4. இந்த ஏழைச் சரீரமாமண்ணை
இளைப்பாறிட மண்ணினில்
ஏற்கவேகொண்டு போய்ப்புதைத்திடும்
காலம் எய்திடில் நல்லதே
அந்தநாளினி லெந்தன் பாடுகள்
அத்தனைக்கும் முடிவுண்டாய்
ஆவி உம்மிடம் தங்கப்போகுமே
ஐந்துகாயத்தில் யேசுவே.

5. வாராய் நித்திரையின் தோழனே
சாவே என்னைக்கொடுபோ
வாகாய்க்கப்பல் தாவில்ஓட
வழியே திருப்பாயோ
பாரோர்திகி லாணுயிந்த
பக்தன்மகிழ் வானுய்
பரன்யேசுவின் பரஞ்சேரநற்
பாதை யெனக்கானுய்.

6. அப்பனே சிறைச்சாலையாமென் தன்
அங்கத்தை யிந்தநேரமே
அடியேன்விட்டுச் செல்வங்கள் பொழி
அந்தலோகத்திற் சேரவும்
தப்பறச் சுத்தமான நீதியர்
தங்களோடென தன்புள்ள
சாமியாகிய உம்மைப் போற்றவும்
தாபமாகினேன் யேசுவே.

ஞா. சா

## ஆராதனை முடிவு.

63. வந்தனம் உமக்காமேன்.

சங்கராபரணம். ஆதிதாளம்.

1. அனுக்ரக வார்த்தையோடே—இப்போ—து
அடியாரை அனுப்புமையா!
மனமதில் தயவுறும் மகத்துவபரனே!
வந்தனம் உமக்காமென்.

2. நின் திரு நாமமதில்—கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திட
சாமி நின்னருள் புரிவாய்.

3. தோத்திரம், புகழ், மகிமை,—கீர்த்தி,
துதிகனம் தினமுமக்கே
பாத்திரமே; அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

J. S.

## 64. தேவ துதி.

(எதேனில் ஆதிமணம் என்ற ராகம்)

1. இன்பமுள்ள இயேசுவே
அன்பாய் நீர் போதித்தீர்
உம்சித்தம் அறிந்தோமே
எம்உள்ளத்தில் காப்பீர்

2. பரிசுத்த வழியில்
எங்களை நிறுத்தும்
உமது சத்தியத்தில்
எங்களை நடத்தும்—ஆமென்

## 65. ஸ்துதி.

இராகம்—சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி

சீர் ஏசு நாதனுக்குச் ஜெயமங்களம்;—ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்.

அனுபல்லவி

பாரேறு[1] நீதனுக்குப் பரம பொற் பாதனுக்கு,
நேரேறு[2] போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு, —சீர்

சரணங்கள்

1. ஆதி சருவேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப்[3] பிரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்;
நீதிபரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,[4]
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனு வேலனுக்கு, —சீர்

2. மாணுபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக்கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்;
கானான் நல் தேயனுக்கு, கன்னிமரி சேயனுக்கு,
கோனார் சகாயனுக்கு, கூறு பெத்த லேயனுக்கு, —சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்கு, சருவாதிகாரனுக்கு,
பத்தர் உபகாரனுக்கு, பரம குமாரனுக்கு, —சீர்

வே. சா.

---

1 பூமி. 2 நன்னெறி. 3 பூமி, சர்வ.
4 குணாலன் for குணாலயன் = கடவுள்.

# சுதேசப் போங்கான தமிழ் ஆராதனை முறைமை

**1.** முழங்காலில் நின்று பாடவேண்டிய திருப்புகழ்.

சிவந்த அங்கி—என்ற இராகம்.

1. சருவவலிமை கிருபைகள் மிகுந்தசருவேசா
தரிசனந்தருமுன் சன்னிதிபுகுந்தேன் திருவாசா

2. தூயசிந்தைஉண்மையிலுனையே—தொழுதேத்த
தூய ஆவிகொண்டெனை நிரப்பும் ஜகதீசா

3. இருதயத்தைச்சிதற விடாமல் ஒருநேராய்
இசைத்தமைத்துப் பரவசமாக்கும்நசரேயா

4. அருளின்வாக்கைக்கருத்துடன்கேட்டு அகத்தேற்று
அறுபதுநூறு மூப்பதாய்ப்பெருக அருளீசா ஆமென்

**2.** முறை முறையாய்ச் சொல்லுதல் அல்லது பாடுதல்

**குரு.** கர்த்தரின் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

**சபை.** கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

**குரு.** நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம். வாருங்கள்.

**சபை.** அவர் நம்முடைய தேவன், நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

குரு. யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

சபை. கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

குரு. அவருக்கு விரோதமாக நாம் கலகம்பண்ணி அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு நமக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய வசனத்துக்கு செவிகொடாமற்போனோம். ஆனாலும் நமது தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புக்களும் உண்டு.

சபை. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

குரு. வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

சபை. நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய் 'தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்' என்பேன்.

யாவரும். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

**3. கீர்த்தனை.**

**4.** ஆரம்ப வாக்கியமும் தேவ துதியும்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும்—என்ற இராகம்.

1. குரு—கர்த்தாவே ஆவியோடும் உண்மையோடும் உனையே
கருத்தாக யாம் வணங்க கருணை கூருந் துணையே

சபை—விரும்பத்தகாத எண்ணம்நானுவிதகவலை
நாடாதொரே மனதாய் நாட்டுவாய் எம் மனதை

2. குரு—ஐயாஉன் மக்களோடு ஐக்கியமாய்த் தொழவே
ஆலயத்தோடிவரும் ஆசைஎமக்களியே

சபை—பொய்யாதவேதவாக்குப் பொருளறிவு மிகவே
போதிக்குந் தொண்டர்சொல்லை பொன்போல் மதித்
(திடவே

3. குரு—போதனை கேட்டபடி சாதனையாயொழுக
புனிதஎம்செய்கை கண்டுபூவோர் உன்னைப்புகழ

சபை—சோதனைபாவவினை சுற்றுதென்னைக்காவாய்
தூயதாம் செந்நீர் கொண்டுதோஷமெல்லாந்தீராய்

4. குரு—பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்
மகிமை உண்டாவதாக

சபை—ஆதியிலும் இப்போதும் எப்போதுமான
சதாகாலங்களிலும் இருக்கிறபடியே ஆமேன்.

**5.** பாவ அறிக்கை ஜெபம்

கீர்த்தனை 25 ஆண்டவனே கிருபை கூராய்

அல்லது

27 நின்னடிக் கன்புசெய்யா நீசனேன்

6. குரு! பாவமன்னிப்பு அறிவித்தல்

7. உன்னத துதி

குரு. கீர்த்தனை 31. 1. உன்னதத்திற்பார்க்கு

அல்லது

உன்னத பரனுக் கேமிக மகிமை
ஒண் சமாதானம் உலகினில் பெருக
கடவுளின் பிரியமதே என்றென்றும்
நீசராம் மானிடர் மேல் துலங்க.

சபை. கீர்த்தனை 7 துதிக்கிறோம் உம்மை

8. வாழ்த்துதலும் சுருக்க ஜெபமும்

9. நிருப சுவிசேஷ வாக்கியங்கள்

10. விசுவாசப் பிரமாணம்

11. கீர்த்தனை

12. பிரசங்கம்

13. கீர்த்தனை (உண்டியல்)

14. குரு: பொது ஜெபம்

சபை: கீர்த்தனை 52. பரமண்டலங்களிலிருக்குமெங்கள்

15. குரு: ஆசீர்வாதம்

சபை: கீர்த்தனை 63, 64 அல்லது 65.

Printed at the Sampath Press,
MADURA,
1933.